
Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்


புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 19 இதழ் - 10 அக்டோபர் - 2006








ஒன்பதாவது வேதாகம கருத்தரங்கில் பங்கு பெற்றோரில் ஒரு பகுதி

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. மார்க்க சம்பந்தமான தவறுகளை கண்டிக்க வேண்டும் ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 22
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 24
7. பரிணாமக் கொள்கை ........ 29
8. தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள் ........ 33

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 19 OCTOBER - 2006 Issue - 10


ஆசிரியர் உரை

## உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று

இப்பாழுலகை மீட்கும்படியாக மானிட ரூபமெடுத்து வானத்திலிருந்து இறங்கி வந்த இயேசுவானவர் நன்மை செய்கிறவராகப் பெலஸ்தீனா தேசம் முழுவதும் சுற்றித் திரிந்தார் என்பது வேதம் வெளிப்படுத்தும் ஓர் உண்மை. அப்படி நடந்து திரிந்த இயேசுவானவர், எண்ணிலடங்கா அற்புதங்கள் செய்ததோடு ஏராளமான காரியங்களை உபதேசங்களாகப் போதித்தார். அவர் தம் வார்த்தைகளை நாம் குனிந்து கவனித்தால், அவை ஒரே விதமாக இல்லாமல் ஒரு பெரிய கலவையின் கூறாகக் காணப்படுகிறது. ஆம், அவைகளில் பாசமும், பரிதாபமும் இருக்கும்; நேசமும், நெருக்கமும் இருக்கும், உரிமையும், உருக்கமும் இருக்கும்; கனிவும், கண்டிப்பும் இருக்கும், எச்சரிப்பும், எதிர்பார்ப்பும் இருக்கும்; அத்தோடு ஏக்கமும், ஏமாற்றமும் கூட இருக்கும். இப்படித்தான் அவருடைய பிரசங்கத்தின் பாணியும், உபதேசத்தின் தன்மையும் இருந்தது. ஜனங்களின் சரீரத் தேவைகளின் ஆழத்தை அறிந்தவராகவும், அதை விட முக்கியமாக, அவர்களின் ஆவிக்குரிய அவசியங்களின் நாடித்துடிப்பை உணர்ந்தவராகவும் இருந்தார். இவைகளினடிப்படையில் தனது உபதேசங்களை அமைத்தபடியால் தான், இன்றளவும் உலகம் அவரை ஓர் ஒப்பற்ற பெரும் போதகர் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட இயேசுவானவர்தான், ஒரு சமயம் மிகுந்த ஏமாற்றமடைந்தவராய், **உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று**, என்று கண்ணீர் மல்கக் கூறியுள்ளார். இப்பூமியின் வாழ்க்கையில் ஒரு காரியத்தைச் செய்வதற்கும், செய்யாமலிருப்பதற்கும் **மனது** மிகவும் முக்கியமானது.

ஒன்றைச் செய்தே ஆக வேண்டுமென்ற மனது இருக்குமானால், இமயம் கூட சருகு போல தோன்றும். அதே நேரத்தில், ஒன்றைச் செய்யக் கூடாது என்று நினைத்து விட்டால் துரும்பு கூட உத்திரமாகக் காட்சி தரும். குறிப்பாக, ஆவிக்குரிய வாழ்க்கையில் மனமில்லையானால் ஓர் அங்குலம் கூட நகர முடியாது. ஒருவேளை, அப்படியே நகர்ந்தாலும் அங்கே காரியங்கள் உருப்படியாய் இருக்காது. இந்த உண்மையைப் பச்சையாக உணர்ந்திருந்த படியால் தான், ஆண்டவருக்கு முன்னோடியாய் வந்த யோவான் ஸ்நானகனும், இயேசுவும் மனந்திரும்புங்கள், மனந்திரும்புங்கள் என்று கத்தி கத்திப் பிரசங்கித்தனர்.

சரி, இப்பொழுது, நம்முடைய இயேசுவானவர், **உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று** என்று எப்பொழுது சொன்னார், யாரைப் பார்த்துச் சொன்னார், எங்கிருந்து சொன்னார், ஏன் சொன்னார் என்பது பற்றி யெல்லாம் கொஞ்சம் தெரிந்து கொண்டால், இத்தலைப்பைச் சிறப்பாக அறிந்து கொள்வதற்கும், இதிலிருந்து தேவன் இம்மாதம் வெளிப்படுத்த விரும்பும் பாடங்களைப் புரிந்து கொள்வதற்கும் மிகுந்த ஒத்தாசையாக இருக்கும். ஆகவே, நமது வழக்கத்தின்படியாக உள்ளே செல்லுவோம்.

சுமார் மூன்றரை ஆண்டுகள் பரலோக தேவனின் திருப்பணியை ஓய்வு ஒழிச்சலின்றிச் செய்து வந்த இயேசுவின் பூமிக்குரிய வாழ்வின் நாட்கள் முடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. கொல்கொதா மலையின் உச்சிக்கு பாரச் சிலுவையோடு ஊர்ந்து செல்லச் சில நாட்கள் தான் எஞ்சி இருந்தது. அப்பொழுது தான் எருசலேமின் குடிகளைப் பார்த்து, குறிப்பாக தேவாலயத்தைப் பார்த்து இப்படியாகக் கதறியுள்ளார். "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று" (மத் 23:37) என்று.

இப்படி மனம் குமுறி இயேசுவானவர் எங்கிருந்து கூறினார் என்பது பற்றி இரு வேறு கருத்துக்கள் உள்ளன. மத்தேயு 24:1ல் இயேசு தேவாலயத்தை விட்டு புறப்பட்டுப் போகையில் என்றுள்ளதால், தேவாலயத்திலிருந்து தான் கூறினார் என்பது முதல் கருத்து. மற்றொன்று, அவர், சிலுவைக்கு முன்பாக, கடைசி முறை ஒலிவ மலைக்குச் சென்று, அங்கிருந்து இறங்கி வருகையில், சுமார் 500 அடி தூர இடைவெளியில், கெதரோன் பள்ளத்தாக்கிற்கு இப்புறத்தில் நின்று கொண்டு, ஏராளமான ஜனங்கள் சூழ்ந்திருக்கையில் கம்பீரமாகக் காட்சி தந்த எருசலேம் தேவாலயத்தைப் பார்த்துக் கூறினார் என்பது. இந்த இரண்டாவது கருத்துச் சரி என்றால், கடந்த மாதம் நானும், என் துணைவியும் அந்த இடத்தை நேரில் பார்த்தோம். அன்றைக்கிருந்த தேவாலயத்தை, எருசலேமின் வேறு எந்தப்

பகுதியிலிருந்து பார்த்தாலும் அதைவிடச் சிறப்பான கோணத்தில் பார்க்க முடியாது. அங்கிருந்து, எவ்வளவு நெஞ்சுநோக இயேசுவானவர் இப்படிக் கூறியிருப்பார் என்பதை நினைத்தாலே மெய் சிலிர்க்கிறது.

இந்த எருசலேமுக்காக, எருசலேமின் ஜனங்களுக்காகத் தேவன் ஆதியிலே இருந்து செய்த காரியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆதியாகம புத்தகத்திலேயே இடம் பெற்று, இன்றளவும் உலகின் முதன்மைப் பட்டணங்களுள் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருவது எருசலேம் மாத்திரமே. வேறு எதற்கும் இச்சிறப்பு கிடையாது. இப்பட்டணத்தை வேதாகமம் பரிசுத்தஸ்தலம் (சங். 46:4) என்றும், உண்மையுள்ள நகரம் என்றும் (ஏசாயா 1:21) பரிசுத்த நகரம் (மத். 4:5) என்றும் அழைக்கிறது.

இப்படி, தேவனுடைய இருதயத்தில் இடம் பிடித்த பட்டணமாக இருந்து, பரிசுத்தம், உண்மை என்ற உன்னத வார்த்தைகளுக்கு உரிமை கொண்டாடும் ஒன்றாக இருந்தாலும், இதன் செயல்பாடு தேவனுக்குப் பிரியமானதாக தொடர்ந்து இருக்கவில்லை. இயேசு வருவதற்குப் பலகாலம் முன்பாகவே, தேவனுக்கு விரோதமான பாதையில் பயணம் செய்ய ஆரம்பித்ததோடு, தேவ திட்டத்திற்கு எதிராகச் செய்யவும் தன்னில் துணிகரம் கொண்டுவிட்டது. தேவன், தன்னுடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து எச்சரித்து வந்தார். “எருசலமே, நீ இரட்சிக்கப்படும் படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு, எந்த மட்டும் அக்கிர நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும்” (எரே 4:14) என்றும், இன்னும், எரேமியா 6:8-ல் எருசலேமே, என் ஆத்துமா உன்னை விட்டு பிரியாத படிக்கும், நான் உன்னைப் பாழும் குடியற்ற தேசமும் ஆக்காத படிக்கும் புத்தி கேள் என்றும் கூறியுள்ளார்.

தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துத்திருந்தாத எருசலேமுக்காகவும், பூமியின் ஏனைய மக்களுக்காகவும் தான், தன் கடைசி கட்ட முயற்சியாகத் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி அவருடைய திருவார்த்தைகளுக்காகிலும் செவி கொடுப்பார்களென்று எதிர்பார்த்தார். அவருக்கும் அவர்கள் செவி கொடுக்கவில்லை. மத் 23:37ம் வசனத்தில் இயேசு ஆண்டவர் **எத்தனை தரமோ** என்று கூறி, தான் எடுத்த முயற்சி எவ்வளவு அதிகமானது என்பதை வெளிப்படுத்துவதோடு, எடுத்த முயற்சிகளின் **தன்மை** பற்றியும் இப்படியாகக் கூறுகிறார். “கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்க்கும் வண்ணமாக” என்று. நம்ம ஊர்க் கோழிகள் தன் குஞ்சுகளைப் பாதுகாப்பதற்குப் படும் பிரயாசை களைக் காட்டிலும், வனாந்திரப் பகுதிகளை அதிகம் கொண்ட பெலஸ்தீனா தேசத்துக் கோழிகள் அதிக விழிப்போடிருந்து பாதுகாக்க செயல்பட வேண்டும். ஏனெனில், உடனடியாக ஓடி ஒதுங்குவதற்கு முட்புதர்களோ, பதுங்குவதற்குத் தோதான அடர்ந்த செடி கொடிகளோ அங்கு இல்லை. அவர்கள் மீது தான் கொண்டிருந்த நேசம் எவ்வளவு கரிசனையுடன் கூடியது என்பதை இதன் மூலம் விளக்கியுள்ளார்.

இவ்வளவுக்கதிகமாகப் பிரயாசை எடுத்தும் அவர்கள் திருந்த வில்லை. திருந்துவதற்கு மனம் இல்லாமற் போயிற்று. யோவான் நற்செய்தியாளரும் இதைத்தான் கூறுகிறார். **அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை** என்று (யோவா 1:11). அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதால் அவர்கள் மீது வரப்போகும் விளைவை எண்ணிப்பார்த்தார். வசனம் 38ல் **இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்** என்று சொல்லப் பட்டுள்ளது. எருசலேம் பாழாகிப் போகும் என்பதையும், அதின் குடிகள் அழிக்கப்படுவார்கள் என்பதையும் நினைக்கும்போது அவருக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. ஏனெனில், உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அவர் வராமல் (யோவா 3:17). இழந்துபோன எருசலேமின் குடிகள் போன்றோரை இரட்சிக்கும்படியாகவே வந்தார். (லூக். 19:10) ஆகவே தான், எருசலேமை நினைத்து, எப்படி அந்தரத்தில் தொங்க நேர்ந்த தன் துன்மார்க்க மகன் அப்சலோமுக்காகத் தாவீது புலம்பினானோ, அதுபோலவும் (2சாமு 18:10,33) சொல்லப்போனால், அதை விடப் பலமடங்கு மேலாகவும் எருசலேமுக்காகப் புலம்பினார்.

சரி, பழைய ஏற்பாட்டின் காலத்திலும், இயேசுவின் நாட்களிலும் தான் இந்த எருசலேமின் குடிகள் தங்கள் பிடரியைக் கடினப்படுத்தினார்களென்று நாம் நினைக்கத் தேவையில்லை. இயேசு அவர்களுக்காக வந்து, வாழ்ந்து, மரித்து, உயிர்த்துப் பரமேறி சுமார் 2000 ஆண்டுகள் ஆகிவிட்ட இன்றைய நாட்களிலும், அவர்களின் நிலை அப்படியே தான் உள்ளது. பூச்சக்கரத்தின் எத்திசையிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் எண்ணிலடங்கா ஜனம், இயேசு ஆண்டவரின் அருமை பெருமைகளை அறிந்து, உணர்ந்து, ஏற்று, அவர் பிறந்த மண்ணைப் பார்க்க நாள்தோறும் பயபக்தியோடு வந்து கொண்டிருக்கும் போது, எருசலேமிலும், பெலஸ்தீனாவிலும் வாழும் யூதர்கள், அதைப் பற்றிய எவ்வித தொடுதலு மின்றி, பழமையை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதை நேரில் பார்க்க, உண்மையில் பரிதாபமாகவே இருந்தது.

சாலமோன் கட்டிய தேவாலயத்தைச் சுற்றிலுமிருந்த மதில் சுவரின் எஞ்சிய பகுதி என்று ஒரு "குட்டிச்சுவர்" இருக்கிறது. அதற்கு புலம்பல் சுவர் (Wailing Wall) என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்தப் பொல்லாத யூதர்கள், ஆண்களும், பெண்களுமாக திரளாக வந்து, அந்த குட்டிச் சுவரைத் தொட்டுக் கொண்டும், பிடித்துக் கொண்டும், அதில் மோதிக் கொண்டும் ஓவென அழுகிறார்கள். **மேசியாவே வாரும், தேவாலயத்தை திரும்பவும் கட்டும், எருசலேமில் வீற்றிருந்து அரசாளும்** என்று முறையிடுகிறார்கள். இதே எருசலேமின் ஒரு பக்கம், மேசியாவாகிய இயேசு இரட்சகர் வந்து போனதற்குப் பலமான சாட்சியாக **திறந்து கிடக்கும் கல்லறை இருக்கிறது**. ஆனால், மறுபக்கமோ, மேசியாவே வாரும் என்று ஒப்பாரி. இந்தக் காட்சியைப் பார்க்கிறதற்கு எவ்வளவு வேதனையாயிருக்கிறது தெரியுமா? ஆக, இன்றைக்கும் நிலைமை அப்படித்தான் உள்ளது.

எருசலேமின் குடிகள், இயேசுவை ஏற்றுக் கொள்ளாததற்கு நிறைய காரணங்களை நாம் அடுக்க முடியும் என்றாலும், அவைகளில் பிரதானமாக ஒரு மூன்றை நாம் பார்த்து சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

## I தேவனுடைய வார்த்தைகளை அற்பமாக எண்ணினார்கள்

எருசலேமின் குடிகள் இயேசுவுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான காரணங்களில் முதலாவதாக, அவர்கள் வேத வசனங்களை அற்பமாய் எண்ணியதைக் கூறலாம்.

மோசேயைக் கொண்டு பிரமாணங்களை இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த தேவன், அப்பிரமாணங்களுக்கு அவர்கள் என்ன மரியாதை கொடுக்க வேண்டுமென்பதையும் வெளிப்படுத்தி விட்டார் (உபா 5:1) மோசேயின் காலத்துக்குப் பிறகும் தேவன் அவருடைய வார்த்தைகளின் படியாகச் செய்வது மிகவும் அவசியம் என்பதை மீண்டும் வெளிப் படுத்தியுள்ளார். "இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிரு என்று" (யோசு 1:8). ஆனால், இவர்களுக்கோ, வேத வாக்கியங்கள் என்ன சொல்லுகிறதென்பதைக் குறித்த பாரம் ஒரு போதும் பெரிதாக இருந்ததில்லை.

வேத வாக்கியங்களைக் கொண்டு இவர்கள் இயேசுவை அறிந்திருக்க முடியுமா என்று பார்த்தால், நிச்சயமாக முடியும் என்பதே பதிலாக உள்ளது. எப்படியெனில், "....**என்னைக் குறித்து சாட்சியிடுகிறவைகள் வேத வாக்கியங்கள்**" என்று இயேசு அழுத்தமாகக் கூறியுள்ளார். (யோவா 5:39) இயேசுவின் கூற்றை பிலிப்பு மெய்யாக்கியுள்ளதைப் பாருங்கள். பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்பு, கபடற்ற உத்தம இஸ்ரவேலனாகிய நாத்தான்வேலைக் கண்டு, **நியாயப்பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்** என்றான். (யோவா 1:45). அருமையானவர்களே, **தேவனையும், அவருடைய குமாரனையும், அவருடைய சித்தத்தையும் அறிந்து கொள்வதற்கு வேத வாக்கியங்கள் கண்டிப்பாகப் போதுமானது**. வேதவாக்கியங்களில் உள்ளதை எருசலேமின் குடிகள் புரிந்து கொள்ள முடியாமற் போனது, வேத வாக்கியங்களின் குறைபாடல்ல. மாறாக, இயேசுவானவர் மத்தேயு 13:15ல் சொல்லியுள்ளது போல அவர்கள் **இருதயம் கொழுத்திருந்ததே** காரணம்.

சரி, இப்படிப்பட்ட, வேதவசனங்களின் சாட்சியும் போதாதென்று, யோவான் ஸ்நானகனும், **இவரே தேவனுடைய குமாரன்** என்று சாட்சி கொடுத்தார் (யோவா 1:34). இந்த யோவானின் சாட்சியையும் ஜனங்கள் ஏற்றுக் கொள்ளாத போது, இயேசு சொன்னதைத் தான் கொஞ்சம் பாருங்களேன்! "யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், **நான் நிறைவேற்றும் படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்து வருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சி**

**கொடுக்கிறது**" என்றார் (யோவா 5:36) இதற்கு மேலும், இயேசு தேவனுடைய குமாரனென்று ஏற்றுக்கொள்வதற்கு வேறு என்ன தான் சாட்சி வேண்டும்? சொல்லுங்கள்!

எருசலேமின் குடிகளும், யூதர்களும் இப்படித் தரம் தாழ்ந்து நடந்திருக்கிறார்களே என்று எண்ணி, வியந்து நிற்கும் அருமையான தேவனை நேசிக்கும் ஜனமே! நம்முடைய வாழ்வில் நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? வேத வாக்கியங்களுக்கு எப்படிப்பட்ட மரியாதை கொடுத்து வாழ்ந்து கொண்டுள்ளோம்? வேத வாக்கியங்களை **ஆராய்ந்து** பாருங்கள் என்று இயேசு சொல்லியுள்ளாரே, நாம் உண்மையில் ஆராய்ந்து பார்த்துக் கொண்டுள்ளோமா? வேதவாக்கியங்களின் ஒட்டு மொத்த போதனை என்ன என்றும், இன்றைக்கு என்னைக் கட்டுப்படுத்தும் உபதேசம் எது என்பதையும் நம்முடைய ஆராய்ச்சியில் கண்டுபிடித்துவிட்டோமா? வேத வாக்கியங்களில் தான் **நித்திய ஜீவன்** உண்டு என்பது எப்பொழுதும் நம் நினைவில் நிற்க வேண்டும்.

அன்பானவர்களே, வேத வாக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனித கோட்பாடுகளுக்கும், பாரம்பரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தபடியால் தான், குட்டிச் சுவற்றைக் கட்டிப்பிடித்து அழ வேணடிய அவசியம் யூதர்களுக்கு வந்திருக்கிறது. ஒருவேளை, நாமும் அவர்களைப் போல புதிய ஏற்பாட்டு உபதேசத்தை அற்பமாக எண்ணி, இயேசு கட்டின ஒன்றான மெய்ச் சபையைப் பற்றி (மத் 16:18) அக்கறை யில்லாமல் வாழ்வோமானால், நரகத்திற்குப் போய் அங்கே நித்திய காலமாய் அழவேண்டிய நிலை வந்து சேரும். ஆகவே, இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு மதிப்பளித்து நமது ஆன்மீக வாழ்வை நடத்துவோம்.

**II தங்களுடைய காரியங்களில் நாட்டமுடையவர்களாக இருந்தனர்**

எருசலேமின் குடிகள், இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான இரண்டாவது காரணமாக, அவர்கள் தங்களுடைய காரியங்களில் அதிக நாட்டமுடையவர்களாயிருந்ததைக் கூறலாம்.

பூமியில் வாழும் ஒருவன் பூமிக்கடுத்த சில காரியங்களில் நாட்டமுடையவனாக இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஏனெனில், இப்பூமியில், தேவன் அனுமதிக்கிற காலமெல்லாம் அவன் வாழ்ந்தாக வேண்டும். அதே நேரத்தில், தேவனுக்கடுத்த காரியத்திற்கும், சொந்தக் காரியத்திற்குமுள்ள வேறுபாடு தெரிந்தவனாகவும், எதற்கு என்ன முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதில் தெளிவுள்ளவனாகவும் இருக்க வேண்டும். இந்த அறிவு எல்லாருக்கும் இருக்க வேண்டுமென்பது தேவனுடைய விருப்பம், இயேசுவின் எதிர்பார்ப்பு. இதற்காகத்தான், இயேசுவானவர், "ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி

அநேகரை அழைப்பித்தான்" என்ற உவமையைச் சொன்னார் (லூக் 14 ஆம் அதி) அவ்வுவமையில் மூன்று பேருமே போக்குச் சொல்லத் தொடங்கி, **தங்களுடைய காரியங்கள் தான் பெரிது** என்பதை வெளிப்படுத்தினர்.

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த ஜனங்களுக்கு பக்தி வாழ்வும், ஆராதனைக்குரிய காரியங்களும் கூட ஆதாயத் தொழிலாக மாறிவிட்டது. ஆகவே தான் உலகின் பல பாகங்களிலிருந்து எருசலேமுக்கு வருபவர்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்துவிட்டனர். அன்பான இயேசுவுக்கு, இவர்களின் இந்தச் சுயநலப் போக்கு ஆத்திரத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. சவுக்கெடுத்து அவர்களை விரட்டியதோடு, என்னுடைய வீட்டை கள்ளர் குகையாக்கினீர்கள் என்றும் சாடினார் (மத் 21:12,13).

இங்கே, நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியம், இவர்கள் இப்படிப்பட்ட வேத விரோதச் செயலைத் **தெரியாமல் செய்யவில்லை** என்பது. எப்படியெனில், இயேசு லாசருவை உயிரோடே எழுப்பினதற்குப் பிறகு கூடின ஆலோசனைச் சங்கத்தார், நாம் இவனை இப்படி விட்டுவிட்டால் எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து "**நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்களே**" என்றார்கள் (யோவா 11:47,48) ஆக, இந்தத் திருடர்களின் சிந்தையெல்லாம் தொழில், வருமானம், ஸ்தானம்! பக்தி என்பது ஒரு வேஷம். இயேசுவின் வார்த்தைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள மனமில்லாமற் போனதற்கான காரணம் என்னவென்று இப்பொழுது விளங்குகிறதா?

அன்பானவர்களே, இயேசுவின் காலத்து எருசலேமின் குடிகளோடும், யூத ஜனங்களின் நிலையோடும் இன்றைய கிறிஸ்தவத்தின் சூழ்நிலையை ஒப்பிட்டால் அப்படியே அச்சில் ஊற்றி எடுத்தாற் போல இருக்கிறது தானே. ஆச்சரியமாக இருக்கிறதா? அன்றைக்கு எப்படி தேவனால் அனுப்பப்பட்ட இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்றுக் கொண்டால் தொழிலும், வருமானமும், அந்தஸ்தும் போச்சு என்று எண்ணினார்களோ, அதேபோல, இன்றைக்கு இயேசுவால் கட்டப்பட்ட ஒன்றான மெய்ச் சபையையும், புதிய ஏற்பாட்டு உபதேசத்தையும் ஏற்றுக் கொண்டால் தொழிலும், வருமானமும், அந்தஸ்தும் போய்விடும் என்று அநேக பிரசங்கிகளும், பாரம்பரியமும், கௌரவமும், பகட்டும் போய்விடுமென்று மார்க்க முன்னோடிகளும், இனிமேல் கொள்கையையும், நம்பிக்கையையும் மாற்றினால் அது மரியாதைக் குறைவை ஏற்படுத்துமென்று சராசரி **கிறிஸ்தவனும் எண்ணுகிறார்கள்**. அப்படித்தானே! மொத்தத்தில் தேவ காரியங்களைக் குறித்த கிறிஸ்துவின் சிந்தை பெரும்பாலானவர்களுக்கு இல்லை என்பது மாத்திரம் திட்டமாக தெரிகிறது.

ஆனால், நாம் என்றைக்கு நமது காரியங்களுக்கான சிந்தையைக் குறைத்து, அவருடைய காரியங்களில் நாட்டம் செலுத்துகிறோமோ அப்போது தான் தேவனுக்கடுத்தவைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படியும் மனதைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## III மற்றவர்களுடைய நினைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்

எருசலேமின் குடிகள் இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான, இன்னுமொரு காரணமாக, அவர்கள் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டதைக் கூறலாம்.

இவர்கள் இப்படிச் செயல்பட்டார்கள் என்று நான் கூறவில்லை, வேத வசனங்கள் கூறுகிறது. அதுவும், ஒரு முறை அல்ல, பலமுறை. ஆம், யோவான் நற்செய்தியாளனுடைய நூலில், **தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக் கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?** (யோவா 5:44) என்று இயேசு கேட்டுள்ளார். இன்னும், அதே நூலின் 12 ஆம் அதிகாரம் வசனம் 42,43 சொல்லுவதையும் கவனியுங்கள். "ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்காதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். **அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்**". மனிதர்களுடைய எண்ணங்களுக்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்களென்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்?

ஆனால், பழைய ஏற்பாட்டுப் பக்தன் ஆபிரகாமும், புதிய ஏற்பாட்டில் பவுலடியாரும் இக்காரியத்தில் எப்படிச் செயல்பட்டார்களென்று உங்களுக்கு நினைவிலிருக்கிறதா? கர்த்தர் ஆபிரகாமை நோக்கி; நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ (ஆதி. 12:1) என்று அழைத்த போது, அவன் யாருடன் ஆலோசனை செய்தான்? ஊரும், உறவும், நட்பும் என்ன நினைக்குமென்று அவன் எண்ணியிருந்தால், தேவனுடைய வார்த்தைகளுக்குக் அவனால் கீழ்ப்படிந்திருக்க முடியுமா? **விசுவாசிகளின் தகப்பன்** என்ற பெருமை அவனுக்குக் கிடைத்திருக்குமா? சொல்லுங்கள்.

அதுபோலத் தான் அப்போஸ்தலன் பவுலும் தன் இரட்சிப்பு விஷயத்தில் மாற்றாரின் கருத்துக்கு மருந்துக்குக் கூட அவன் மதிப்பளிக்கவில்லை. இயேசுவின் அழைப்பைத் தான் ஏற்றுக் கொண்ட விதம் பற்றிப் பின்னாளில் கலாத்தியருக்கு நிருபம் எழுதும் போது இவ்விதம் கூறியுள்ளார். "**தம்முடைய** குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்த போது, உடனே நான் **மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணவில்லை**" (கலா 1:16) **என்று**. இப்படிப்பட்ட கீழ்ப்படிதலைத் தான் தேவன் நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார்.

அருமையானவர்களே, இன்றைய உலகமும், கிறிஸ்தவ சமுதாயமும் ஊருக்கும், உறவுக்கும், நட்புக்கும், மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும், மதிப்பளிக்காமல், தேவனுடைய வார்த்தைகளுக்கு மாத்திரம் செவி கொடுத்துக் கீழ்ப்படிவதில் எந்தளவு சிறந்து விளங்குகிறது? இது தான் சத்தியம் என்றும், இதுதான் இந்த வசனத்தின் பொருள் என்றும், இவைகள் தான் இரட்சிப்பின் திட்டத்துக்கான படிகள் என்றும், இதுதான் இயேசு வாக்களித்துக் கட்டின சபையென்றும் சொன்னால், எத்தனை பேர் அட அப்படியா, இத்தனை நாள் எனக்கு விளங்காமற் போய்விட்டதே என்று சொல்லி உடனே ஏற்றுக் கொள்ளுகிறார்கள்? மணிக்கணக்காகக் கேட்டு விட்டு, வாரக் கணக்காகச் சேர்ந்து படித்துவிட்டு, முடிவெடுக்க மாதக் கணக்கில் நாட்களையும் எடுத்துக் கொண்டு, கடைசியில் என்ன சொல்லுகிறார்கள்? நீங்கள் சொல்லுவதெல்லாம் சரிதான், வசனத்துக்குச் சரியான விளக்கம் கொடுத்தீர்கள். ஆனால், எங்க குடும்பம்... எங்க வேலை... எங்க சபை... எங்க ஊர்... எங்க ஜாதி... என்று கூறி அப்படியே இழுக்கிறார்கள் தானே! எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு இப்படியெல்லாம் இழுப்பது எப்படி நியாயமாகும் என்று எண்ணிப்பாருங்கள்? இந்த இடத்தில் அப்போஸ்தலன் பேதுருவும், யோவானும் ஆலோசனைச் சங்கத்தாருக்குக் கொடுத்த பதிலை நினைவுபடுத்த விரும்புகிறேன் "பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்திரமாக, **தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாய மாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள்** (அப். 4:19) என்று.

அன்பானவர்களே, இன்றைய கிறிஸ்தவத்திற்கு உடனடித் தேவை துணிவும், மன உறுதியும் கொண்ட தேவனை நேசிக்கும் ஜனங்கள். அவர்களால் தான் இயேசுவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும் கீழ்ப்படியும் மனதைப் பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் அப்படிப்பட்டவர்களில் ஒருவராயிருக்க வேண்டுகிறேன். ஆமென்!.

**E.Z.S. ராஜநாயகம்**

## ஜெபித்த உங்களுக்கு நன்றி! நன்றி !!

1. **ஒன்பதாம் வேதாகம கருத்தரங்கம் எல்லா வகையிலும் வெற்றியாகவும், தேவ நாம மகிமைக்காகவும் நடந்து முடிந்தது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் 400 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். கருத்தரங்கின் போது 14 ஆத்துமாக்களும், அதைத் தொடர்ந்து 6 ஆத்துமாக்களுமாக மொத்தம் 20 பேர் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தனர்.**
2. **எங்களது எகிப்து, இஸ்ரேல், ஜோர்டான் ஆகிய நாடுகளின் வெளிநாட்டுப் பயணம் பயனுள்ளதாகவும், பாதுகாப்பானதாகவும் இருந்தது.**

**உங்கள் ஜெபங்களுக்கு மீண்டும் நன்றி!**

**- ஆசிரியர்**

## மார்க்க சம்பந்தமான தவறுகளை கண்டிக்க வேண்டும்

இன்றைய உலகில் அநேக மதங்கள் உண்டு, சிலர் அவைகள் எல்லாம் பரலோகத்திற்கு கொண்டு சேர்க்கும் வெவ்வேறு விதமான வழிகள் தான் என்று கூறுவார்கள். இந்த கூற்று உண்மையானால், அது எவ்வளவு அருமையாக இருக்கும்? நாம் எல்லா மதத்தினரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று சொல்ல முடியும். ஆனால், எல்லா நேர்மையோடு நாம் அப்படி ஒருபோதும் சொல்ல முடியாது! ஏன்? ஏனென்றால், பரலோகத்தில் நமக்கு ஒரே தேவன் தான் இருக்கிறார் மற்றும் நம்மை இரட்சிக்கும்படியாக நமக்காக தன் ஜீவனை விட்ட ஒரே இரட்சகர் தான் நமக்கு இருக்கிறார். அவர் தேவ குமாரனான இயேசு கிறிஸ்துவே, அவர் இந்த உலகத்திற்கு கொண்டு வந்தது ஒரே உண்மையான மார்க்கமான கிறிஸ்தவமே.

ஆனால், கவனியுங்கள்! கிறிஸ்தவத்திலும் நாங்கள் கர்த்தரை பின்பற்றுகிறோம் என்று சொல்லும் அநேக பிரிவுகள் உண்டு. சிலர் இந்த கூட்டத்தாருக்கு இருக்கும் ஆர்வத்தையும், தியாக சேவையையும் பரலோகத்திற்கு போக வேண்டும் என்ற வாஞ்சையையும் கண்டு அதன் அடிப்படையில் அவர்கள் செய்யும் சில நல்ல காரியங்களை சுட்டிக் காட்டுவார்கள். ஆனால், நாமோ கிறிஸ்துவின் நாட்களுக்குச் சென்று, அவர் எப்படி மார்க்கப் பிரிவினைகள், மாறுபட்ட கொள்கைகள், தன் போதனையை கேட்கிறவர்களிடத்தில் மாய்மாலம் போன்றவைகளை எப்படி கையாண்டார் என்று பார்ப்பது அவசியம். அவர் எல்லா மார்க்க பிரிவினைகளையும் ஊக்கப்படுத்தினாரா? அவர் அப்படி செய்யவில்லை என்று உங்களுக்கு நன்றாகவே தெரியும். அதற்கு மாறாக அவர்களுடைய தவறுகளை வெளிப்படையாக சுட்டிக்காட்டினார், அவர்களுடைய போதனையை சாடினார். இதை முழுமையாக நீங்கள் புரிந்துகொள்ள மத்தேயு 23ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள்.

இயேசு சொன்னார், "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள். நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்க விடுகிறதுமில்லை. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்; இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள். மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தனாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்".(மத் 23,13-15). மீண்டும் கிறிஸ்து கூறுகையில் "மத். 24:5ல் ஏனெனில் அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு; நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். "இது உங்களுக்குப் போதுமானதாக இல்லை என்றால்,

நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளைக் கவனியுங்கள். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானயேல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத். 7:21-23). நமது ஆண்டவர் இந்த ஜனங்களைப் பற்றி ஏன் இப்படிச் சொன்னார்? அவர்கள் பக்தியாகவும், உண்மையாகவும் அல்லவா இருந்தார்கள்? அவர்கள் தேவ சித்தத்தை செய்யும்படிதானே நாடினார்கள்? ஆம், ஆனாலும் அவர்கள் தவறு செய்தார்கள், தங்களை கேட்கிறவர்களை வஞ்சித்தார்கள், அவர்களை தவறான பாதையில் நடத்தினார்கள், இதை ஆண்டவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை, ஆகவே தான் இப்படி கடுமையாக சாட்டை அடி கொடுக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் அவர் நாட்களில் இருந்த கள்ள போதகர்களை எப்படி கையாண்டார்? அவர் அவர்களை ஏற்றுக் கொண்டாரா, அவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டாரா, அவர்களது போதனையை சரி என்று சொன்னாரா, அல்லது என்ன செய்தார்? பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது, "வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாம் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன். முன் சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன்" (கலா. 1:7-9).

கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் அவர் பணிவாக எடுத்துச் சொல்லும்போது, "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" என்கிறார். (1கொரி 1:10) அவர், ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில், "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்

பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாத வர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (ரோமர். 16:17,18).

கிறிஸ்துவும், பவுலும், மற்ற அப்போஸ்தலர்களும், அவர்களுடைய நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களும், தவறு செய்தவர்களை கண்டிப்பதில் சந்தோஷப்பட்டார்களா? "உங்களை விட நான் பரிசுத்தவான்" என்ற மனோபாவம் அவர்களிடமிருந்ததா? யாரையாவது குற்றம் பிடிக்க வேண்டும், கண்டனம் பண்ண வேண்டும்? என்பதையே வேலையாக கொண்டார்களா? இல்லை, மனிதனுக்குள்ளாக இருக்கும் ஆத்துமாவை அவர்கள் நேசித்தார்கள். கிறிஸ்து சர்வ லோகத்தின் பாவத்திற்காக மரித்தார், பவுலும் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தார் - ஆனால் அதே சமயம், மனிதன் பாவத்திலிருக்கும்போது, தவறு செய்யும்போது, கள்ள போதனை களையும் செய்யும் போது இரட்சிக்கப்பட முடியாது என்று நன்றாகவே அறிந்திருந்தார். தவறை பின்பற்றுவது அவர்களையும், அவர்கள் சொல்லு வதைக் கேட்டு வஞ்சிக்கப்பட்டவர்களையும் அல்லது தவறான பாதையில் நடத்தப்பட்டவர்களையும் இரட்சிக்காது.

அதைப்போலவே, இவ்வுலகில் தாங்கள் கிறிஸ்துவை பின்பற்று கிறோம் என்ற பறைசாற்றும் அநேக பிரிவினை கூட்டங்கள் இன்றைக்கும் உண்டு. அவர்கள் எல்லாரும் நல்லவர்கள் என்பதில் சந்தேகமில்லை. தங்கள் ஜீவியத்தை ஆண்டவருக்காக கொடுக்கிறார்கள். அவர்கள் கடின உழைப்பாளிகள், ஆனாலும் தேவனுடைய வார்த்தையில் இடம் பெறாத அநேக காரியங்களை அவர்கள் நம்பி, அதை நடத்துகிறார்கள். அவைகளில் சில யாதெனில், விசுவாசத்தினால் மட்டும் இரட்சிக்கப்படுகிறோம், எல்லா சபைகளும் நல்ல சபைகள் தான், கிறிஸ்துவின் பெயரை சூட்டிக் கொள்வது முக்கியமானதல்ல, நீங்கள் நல்லவராக இருக்கும்வரை எதை விசுவாசிக் கிறோம் என்பது முக்கியமானதல்ல, என்பவைகள். மார்க்க விஷயங்களில் தேவனே முழு அதிகாரமுடையவர் என்றும் மனிதன் கீழ்ப்படிவதைத் தவிர தேர்ந்தெடுப்பதற்கு வேறு ஒன்றுமில்லை என்றும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே, அவர்களுடைய கீழ்படியாமையையும் அவர்கள் தங்களுக்குள்ளே தனி கூட்டங்களை உருவாக்குவதையும் தங்கள் சொந்த சபையை உருவாக்குவதையும் நாம் கண்டும் காணாதிருக்கலாமா!

அவர்களை தேவஜனமென்று ஏற்றுக் கொண்டு அவர்களோடு சேர்ந்து பணி செய்யலாமா? நாம் அப்படிச் செய்யலாமா? கள்ள போதகர்களைப் பற்றி அதிகம் எடுத்துரைப்பதினால் நாங்கள் மட்டும்தான் பரலோகம் செல்கிறோம் என்று நினைக்கிற மார்க்க சீமான்கள் இவர்கள் என்ற குற்றச்சாட்டு எங்கள் மேல் உண்டு. அதற்கு பயந்து, எங்கள் ஆண்டவர் தன் வார்த்தைகளில் எழுதி கொடுத்த சத்தியத்தோடு நாங்கள் பிரதிபலிக்காமலிருக்கலாகாது. அவரே சத்தியத்தோடு சமரசம் செய்யாமல், அதற்காக துன்பப்பட்டு மரித்தார். அப்போஸ்தலர்களும் அந்த வழி இடுக்கமானது என்று போதித்து அதற்காக தங்கள் ஜீவனை கொடுத்தார்கள். அடுத்து வந்த நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிறிஸ்தவர்களும் சத்தியத்தை பேசியதற்காக துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால், அதற்கு தீர்வாக எதிரியோடு சேரமுடியாது. அது நம்மையும், அவர்களையும் இரட்சிக்காது. நம்மில் யாராவது இரட்சிக்கப்படவேண்டுமென்றால் - அதுவும் தேவ கிருபையினால் இரட்சிக்கப்படவேண்டுமென்றால் - நாம் சொல்கிறதிலும் செய்கிறதிலும் ஆண்டவருக்கு உண்மையாய் இருக்க வேண்டும்.

**J.C. Choate**

**J.C. சோட்**

## வெளிப்படுத்தின விசேஷத்தில் நடக்கும் என்று சொல்லப்பட்ட எல்லாம் இக்காலத்துக்கு பொருந்துமா?

கவனமாய் படியுங்கள், ஏறக்குறைய 550 கி.மு.வில் தானியேலுக்கு காண்பிக்கப்பட்ட தரிசனம், சுமார் 386 ஆண்டுகள் கழித்து நிறைவேறின. [உதாரணமாக. யூதா மேகபீஸ் 165-166 கி.மு.] இந்த காரியத்தையே தேவன், இவைகள் நடக்க இன்னும் காலம் செல்லும் அதை முத்திரைபோடு என்கிறார். [தானி 8:26;12:4]

வெளிப்படுத்தலில் பார்க்கும் போது யோவானைப் பார்த்து புத்தகம் எழுதப்பட்டு முடிந்த தருணத்தில் இதை முத்திரை போடாதே. இவைகள் நடக்க காலம் சமீபம் என்கிறார். [வெளி 22:10]

ஆகையால் 386 வருடங்களுக்கு பின் நடப்பவைகளையே முத்திரைப் போடு என்று சொல்லும் தேவன், 2000 வருடத்திற்கு பின் நடப்பவைகளாக இருந்தால் முத்திரை போடாதே நிறைவேற காலம் சமீபம் என்பாரா, எனவே வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப் பட்டவைகள் எல்லாமே இப்பொழுது நடக்க வேண்டியவைகள் தான் என்பது வேதத்திற்கு புறம்பானது.

# பெத்தானியா "மரியாள்"

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, இம்மாதமும் உங்களோடு சேர்ந்து பெத்தானியாவில் வாழ்ந்த மரியாளைப் பற்றி படித்து தெரிந்து கொள்ள கர்த்தர் கொடுத்த கிருபைக்காய் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த மரியாளைப் பற்றி புதிய ஏற்பாட்டில் லூக்க 10:38-41; மற்றும் யோவா 11; 12;1-3 ஆகிய வசனப் பகுதிகளில் பரிசுத்த ஆவியானவர் நமக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்.

நமதாண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து, **"மனுஷ குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை"** என்று கூறுகிறார். முப்பது ஆண்டுகாலம் தன் பெற்றோருடன் நாசரேத்தில் வளர்ந்து, வாழ்ந்து பிறகு ஊழியத்தின் பாதைக்கு அடியெடுத்து வைத்து $3^1/_2$ ஆண்டு காலமும் மீண்டும் தான் வளர்ந்த ஊருக்கு வந்து, இளைப்பாறி, ஓய்வெடுத்ததாக நாம் வேதத்தில் வாசிக்க முடியாது. அவர் தன் கால்களால் சுற்றித் திரிந்தே பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். அவ்வாறு சுற்றித் திரிகையில், தாம் இளைப்பாற தெரிந்தெடுத்த இடம் பெத்தானியா. இந்த பெத்தானியாவில் தான் மார்த்தாள், மரியாள், லாசரு என்ற மூவரும் வாழ்ந்து வந்தார்கள். இயேசு அடிக்கடி இவர்கள் வீட்டிற்குச் சென்று தங்கி இளைப்பாறியிருக்கிறார் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம்.

மார்த்தாள், மரியாள் இருவருமே இயேசுவை அதிகம் நேசித்தார்கள். இயேசுவும் இவர்களில் அன்புள்ளவராக இருந்தார். ஆனால் உலகக் காரியங்களுக்கு முக்கியம் கொடுக்க அவள் சரீரமும், மனதும் உடன் படுவதேயில்லை. எப்போதும் உள்ளூர ஒரு சிந்தையுடையவளாகவே இருந்து வந்தாள். ஆழமான, ஆவிக்குரிய சிந்தையை பெற்றுக் கொண்டிருந்த இந்த மரியாள், வெளியுலக காரியங்களில் தன் வேகத்தைக் குறைத்து, தன் சிந்தனைக்கும், மனதுக்கும் அதிக வேலையும், வேகமும் கொடுத்து வாழ்ந்து கொண்டுவந்தாள். இப்பேர்ப்பட்ட மரியாளிடம் நாம் சில பாடங்களை கற்றுக் கொள்ள தேவன் உதவி செய்வாராக.

**முதலாவது, அவள் ஒரு ஆவிக்குரிய மாணாக்கி :**

இயேசுவின் புனிதமான பாதத்தருகே அமர்ந்து, மாசற்ற உண்மையை வாஞ்சித்து கேட்பதற்கு, அமைதியாகவும், சமாதானமாகவும் தன்னை அமர்த்துவது, மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் விருப்பமாயிருந்தது. புதிய ஏற்பாட்டில் பார்க்கும் மற்றவர்கள் எல்லாரிலும் இயேசுவின் பாதத்தோடு

தன்னை சம்பந்தப்படுத்திக் கொண்டு, தன்னை தாழ்த்தி, மரியாதையோடும், ஆவிக்குரிய அறிவைப் பெற்றுக் கொள்ள பசியோடும் இருந்தவள் இந்த நம் மரியாள் தான். இயேசுவின் விருப்பத்தையும், அவருடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தையின் மேலும் ஒரு ஆவலும், ஒரு நம்பிக்கையுமுடையவளாய் இருந்ததினால் அவர் பாதத்தில் அமர்ந்து கேட்பதை மிகவும் விரும்பினாள். அப்போஸ்தலனாகிய பவுல் தான் கற்றதைக் குறித்து கூறும் போது, **நான் யூதன், சிலிசியா நாட்டிலுல்ல தர்சு பட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேவின் பாதத்தருகே வளர்ந்து.... நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்** (அப். 22:3) என்று கூறுகிறார். போதகர்களுக்கெல்லாம் போதகராயிருக்கிற நமதருமை இரட்சகர் இயேசு பன்னிரண்டு வயதாய் இருக்கையில், அவர் கற்றுக் கொண்டதைப் பற்றி பேசும் போது, **"மூன்று நாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும் அவர்களை வினாவவும் கண்டார்கள்"** (லூக்கா. 3:46) என்று லூக்கா ஆசிரியர் கூறுகிறார். இப்பேர்ப்பட்ட கற்றுக்கொள்ளும் இதயத்தை மரியாள் பெற்றிருந்ததினால் **தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை** பெற்றுக் கொண்டாள். அருமையான சகோதரிகளே நாமும் அவர் பாதத்தை வாஞ்சித்து, நாடி, மணிக்கணக்காய் அவர் பாதத்தில் விழுந்து கிடந்து நல்ல பங்காகிய இரட்சிப்பை பெற்றுக் கொள்வோம்.

**இரண்டாவதாக, மரியாள் துக்கம் கொண்ட ஒரு ஸ்திரீ :**

மார்த்தாள், மரியாள் இருவருமே தாங்கள் அதிகம் நேசித்த லாசருவின் மரணத்தில் துக்கமுடையவர்களாக இருந்தார்கள். ஆனால், மரியாளின் கண்ணீர் பற்றித்தான் வேதம் பேசுகிறது. இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவருக்கு எதிர்கொண்டு போய், **ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள்** (யோ 11:21) மரியாளோ வீட்டில் உட்கார்ந்து தன் துக்கத்தை இன்னும் அதிகப்படுத்தினவளாக இருந்தாள். போதகர் உன்னை அழைக்கிறார் என்பதைக் கேட்ட மரியாள் எழுந்து போய், **அவரைக் கண்டவுடனே அவர் பாதத்தில் விழுந்து** (யோ. 11:32) அழுதாள் (11:33) இவள் கண்ணீரைக் கண்ட நம் இயேசு ஆவியிலே கலங்கி, துயரமடைந்து அவரும் கண்ணீர் விட்டார். இவர்தான் நம் இயேசு. நம் கண்ணீருக்கு பதில் செய்கிறவர் நம் இயேசு. காலம் தாழ்த்தினாலும் நம் கண்ணீரை காணாமல் இருக்க அவர் மனது கல் அல்ல. எனவே, அருமையானவர்களே, மரியாளின் கண்ணீருக்கு பதில் கண்ணீர் விட்ட இயேசு நம் கண்ணீரையும் துடைப்பார். ஆனால் நம்மில் அநேகர் கண்ணீர் விடுவதே இல்லை கண்ணீர் விடுவது கேவலம் என்று நினைக்கிறோம். கிறிஸ்து **இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது** (பிலி 2:5) என்று வாசிக்கிறோம். அப்படியானால் கிறிஸ்து அழுதார். நாமும் ஆத்துமாவில் பாரம் கொண்டு கண்ணீர் விட்டு அழுவோம்.

**மூன்றாவதாக, மரியாள் ஓர் பலனுள்ள ஊழியக்காரி :**

பெத்தானியாவின் மரியாள் மூலமாக யூதர்களில் அநேகர் இயேசுவிடம் விசுவாசமுள்ளவரானர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. செத்து, நாலு நாள் ஆகிய மரியாளின் சகோதரனாகிய லாசருவை உயிரோடு எழுப்பிய மகா சம்பவம் பற்றி பேசவும், எழுதவும் நமக்கு அறிவு போதாது. தேவனிடம் சித்தமும், இயேசுவின் மூலம் அவர் மகிமைப் படுவதும் நம்மை வியப்பில் ஆழ்த்துவதோடு, ஆறுதலையும், நம்பிக்கை யையும் கொடுக்கிறது. மரியாள் எழுந்து இயேசுவை நோக்கி போகிறதைப் பார்த்த யூதர்கள் அவள் பிறகேயே போகிறார்கள். மரியாளின் அழுகை மற்றவர்களை, அதுவும் இயேசுவை மேசியாதான் என்று நம்ப மறுத்த யூதர்களையே அவர் பின்னே போக வைத்தது (11:31) அப்படி போனதினால் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள். **அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்** (யோ. 11:45). நாமும் மரியாளைப் போல ஆத்துமாக்கள் உயிர்ப்பிக்கப்பட கண்ணீரோடு ஊழியம் செய்வோம்.

**நான்காவதாக, மரியாள் நன்றியுள்ள கொடுக்கும் உள்ளம் கொண்டவள்:**

லாசருவை உயிரோடு எழுப்பினதிற்கு நன்றிக் கடன் செலுத்தும் படியாக பெத்தானியாவில் சீமோன் என்கிறவன் வீட்டில் ஒரு விருந்து ஆயத்தப்படுத்தப்படுகிறது. “**அப்பொழுது மரியாள் விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு கிராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது (யோ 12:3).** இச்சம்பவம் மத். 26:6-13, மற்றும் மாற்கு 14:3-9, (யோ: 11:1; 12:1-11) ஆகிய வசனங்களில் இடம் பெற்றிருக்கிறது. இந்த நன்றிக்கடன் செலுத்தும் இந்த விருந்தில் நம்மை சிந்திக்க வைப்பது என்னவென்றால், மரியாளின் எந்த ஒரு உரையாடலையும் நாம் காணமுடியாது. மரியாள் எதுவும் பேசவில்லை! மரியாள் உட்கார்ந்து, கவனித்துக் கொண்டிருந்தாள். ஒன்றும் பேசவில்லை (யோ. 10:39). லாசருவின் கல்லறையினருகில் மரியாள் அழுதாள் ஒன்றும் பேசவில்லை. சீமோனின் வீட்டில் அவர் நற்கிரியை செய்கிறாள். ஒன்றும் பேசவில்லை. ஒரே ஒரு முறை மரியாள் பேசினாள் என்றால், அது மார்த்தாள் சொன்னதை திருப்பி சொன்னபோதுதான் (யோ. 11:32). அமைதியான அன்பு வல்லமையான ஆயுதம், உலகத்தில் பேச்சாளர்களால் செய்யப்பட்டவைகள் அல்ல. மரியாள் இயேசுவின் பாதத்தில் பூசின தைலம் மிகவும் விலையு யர்ந்தது. அந்த தைலம் இன்னும் உலகம் முழுவதும் மணம் வீசிக் கொண்டுள்ளது.

மரியாளின் தைலம் அநேகருக்கு மணம் வீசினாலும் சிலருக்கு அது வீண் என்று தோன்றியது. பண ஆசை பிடித்த யூதாசுக்கு அது வீணாக தெரிந்தது. இன்னும் உலகத்தில் நறுமணம் மிக்க சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாய் தோன்றுகிறது. **மரியாளின் செயல் அங்கீகரிக்கப்படுகிறது.** அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்து அவளை தொந்தரவு செய்கிறவர்களைப் பார்த்து, அவளை விட்டு விடுங்கள் ஏன் அவளை தொந்தரவுபடுத்துகிறீர்கள்? **என்னிடத்தில் நற்கிரியைச் செய்திருக்கிறாள்.** (மாற்கு : 14:6) என்கிறார். மரியாளின் செயல் **நினைவுகூறப்படத்தக்க ஒன்றாக இருந்தது.** நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து அவள் செயலை அங்கீகரித்ததோடு நின்று விடாமல் நன்றிக்கு பதில் நன்றியாக ஒருபடி மேலே சென்று, **இந்தச் சுவிசேஷம் உகத்தில் எங்கே பிரசங்கிக்கப்படுமோ, அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.** நமக்கு உயர்ந்த பலன் தேவனிடத்தில் இருந்து கிடைக்க வேண்டுமென்றால் அது அவரின் பாதத்தில் இருக்கிறது. மரியாளைப் போல அவர் பாதத்தில் அமர்ந்து, மறுமையில் நித்திய ஜீவனை அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்வோம். இந்த உண்மையை மோசே உபாகமத்தில் கூறும்போது ".... ஜனங்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்" (உபா : 33:3). ஆமென்!

**ரேச்சல் நாயகம்**

## நாளும், நடப்பும்

1. *வங்க தேசத்தைச் சேர்ந்த முகமதுயூனுஸ் என்பவருக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு கிடைத்துள்ளது.*
2. *உள்ளாட்சித் தேர்தலின் போது, சென்னையில் வரலாறு காணாத கலவரம் நடந்துள்ளது.*
3. *இந்திய அணுசக்தித் திட்டங்களுக்கு ஐரோப்பிய யூனியன் ஆதரவளிக்க பிரதமர் கோரிக்கை*
4. *இந்தியப் பெண் எழுத்தாளர் கிரண் தேசாய்க்கு மதிப்பு மிகுந்த "புக்கர்" பரிசு கிடைத்துள்ளது.*
5. *ஐசிசி சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் ஆர்வலர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.*
6. *BSNL உள்ளூர் தொலைபேசி அழைப்புகளுக்கு மீண்டும் சலுகை அளித்துள்ளது.*
7. *வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்தி உலகத்தின் எரிச்சலை சம்பாதித்துள்ளது.*

வாலிபர் பகுதி

# அன்பில் முதிர்ச்சியடைவோம்

வாலிப நெஞ்சங்களே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். உங்களை இந்த வாலிபர் பகுதி வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இன்று, நாம் அவசரமான, பரபரப்பான உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்கு பார்த்தாலும் மக்கள் பதட்டத்துடன், பரபரப்புடன் காணப்படுகிறார்கள். ஒரு நாளைக்கு 24 மணி நேரம் போதாது என்கிறார்கள். எனவே நேரமானது இன்றைய நாட்களில் உலகிலேயே மிக விலை உயர்ந்ததாக கருதப்படுகிறது. ஒருவரிடம் எதைக் கேட்டாலும் தந்துவிடுவார் ஆனால் நேரத்தைக்கேட்டால் இல்லை என்பார். காலத்தை நாம் ஞானமாக பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது உண்மைதான் ஆனாலும் வேதத்தை தியானிப்பதற்கும் தேவனுடைய காரியங்களில் ஈடுபட நாம் நேரத்தை தனியாக ஒதுக்கி விட வேண்டும். இன்றைய அவசரமான உலகத்தில் வாலிபர்களின் அன்பு குறையத் தொடங்கிவிட்டது இன்னும் கொஞ்ச நாட்கள் அல்லது சிலவருடங்கள் சென்றால் அன்பு எந்த கடையில் கிடைக்கும் என்று கேட்பார்கள் போல் தோன்றுகிறது. இன்றைய நாட்களில் காணப்படுகின்ற விலைவாசியினாலும், தங்கள் குழந்தைகளை நல்ல பள்ளியில் அல்லது நல்ல கல்லூரியில் படிக்க வைக்க வேண்டும் என்பதற்காகவும், கணவனும், மனைவியும் வேலைக்கு செல்கிறார்கள். எனவே, தங்கள் குழந்தைகளிடம் அன்பாக இருப்பதற்கு பெற்றோருக்கு நேரம் கிடைப்பதில்லை. எனவே, ஒரு குழந்தையானது சிறுவயதிலிருந்தே அன்பில்லாமல் அதாவது கிடைக்க வேண்டிய அன்பு கிடைக்காமல் வளர்ந்து விடுகிறது. பெற்றோர்கள் பணத்தை நிறைய சம்பாதித்தாலும் குழந்தையானது அன்பை ருசிபார்க்க முடிவதில்லை. இப்படித்தான் பெரும்பாலும் வளர்ந்து இன்று வாலிபர்களாயிருக்கிறார்கள்.

ஆனால் வாலிபர்களுக்குள் வேத வசனம் ஊடுருவி செல்லுமானால் அவர்கள் நிச்சயமாக எல்லோரிடமும் அன்பு செலுத்துவார்கள். எனவே தான் வாலிபர்கள் வேத வசனத்தைப் படிப்பதற்கும், தியானிப்பதற்கும் சமயத்தை ஒதுக்க வேண்டும். ஏனென்றால், நமக்கு தேவனால் கொடுக்கப்பட்ட சமயத்தை எப்படி செலவழித்தோம் என்று நாம் கணக்கொப்பிவிக்க வேண்டும். **கிறிஸ்தவர்களாவதற்கு முன்பு நாம் அன்பை ருசி பார்க்கவில்லை யென்றால் அது நம்முடைய தவறல்ல ஆனால் கிறிஸ்தவர்களானதற்குப் பிறகு வாலிபர்களாகிய நாம் அன்பை ருசி பார்க்கவில்லையென்றால் அது நம்முடைய தவறு.** ஏனென்றால், வேத வசனம் தேவன் அன்பாகவே இருக்கிறாரென்றும், கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்றும் கூறுகிறது. 1 யோவான் 4:8; யோவான் 13:34,35. மேலும் அப்போஸ்தலனாகிய யோவான்

1 யோவான் 4:7ல் சொல்லும் போது "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில், அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். இதனுடைய அர்த்தம் என்ன? நம்முடைய அருமை இரட்சகர் இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களின் போது அப்போஸ்தலனாகிய யோவான் இயேசுவின் உதடுகளிலிருந்து அடிக்கடி அன்பாயிருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். (யோவான் 15:9-23). அன்பு எல்லாக் கற்பனைகளுக்கும் அஸ்திபாரக் கல்லாக இருக்கிறது. இந்த வசனப் பகுதியில் அன்பானது மறுபிறப்பின் அடையாளமாகவும், நிரூபணமாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. தேவனைப் பற்றி நாம் என்ன அறிந்திருக்கிறோம் தேவன் அன்பாகவே இருக்கிறார். எனவே நாமும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது எனவே அவருடைய சித்தத்தின் படி செய்வோமா?

அன்பினால் தான் இந்த உலகமே இயக்கப்படுகிறது. எனவே தான் அன்பிலே நாம் முதிர்ச்சியடைவதற்கு பாடுபடவேண்டும். இதைப்பற்றி புதிய ஏற்பாட்டில் தேவன் அநேக வசனங்களை தந்திருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் போது பிலிப்பி பட்டணத்து மக்கள் அன்பிலே பெருக வேண்டும் என்பதற்காக தான் ஜெபித்ததாக சொல்கிறார். (பிலிப்பியர் 1:9). இதே பவுல் தெசலோனிக்கேயர்களுக்கு சொல்லும்போது "நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும், நிலைத்தோங்கவும் செய்வார் என்று சொல்கிறார்" (1தெசலோனிக்கேயர் 3:12).

**I நாம் பின்பற்றுவதற்கு கிறிஸ்து நம்முடைய மாதிரியாயிருக்கிறார்**

பிரியமானவர்களே, நாம் அன்பிலே முதிர்ச்சி அடைவதற்கு, கிறிஸ்து நமக்கு சிறந்த மாதிரியாயிருக்கிறார். பேதுரு சொல்லும்போது "நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்". (1பேதுரு 2:21). இது நிச்சயமாகவே அவரின் அன்பின் மாதிரியை உள்ளடக்கும். பவுல் சொல்லும் போது நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் என்று சொல்கிறார். (1கொரி. 11:1) அதாவது, இயேசு எல்லோரிடமும் எப்படி அன்பு கூர்ந்தாரோ அப்படியே நாமும் செய்ய வேண்டும். இயேசுவைப் போல் நாம் நிச்சயமாக பிறரிடம் அன்பு செலுத்த முடியாது இயேசு செலுத்தின அன்பைப்போல இந்த உலகத்தில் வாழ்ந்த எந்த ஒரு மனிதனும் அன்பு கூர்ந்ததில்லை ஆனால், நாம் அந்த அன்பின் அளவை அடைய முயற்சி செய்ய வேண்டும். இயேசுவின் அன்பைப் பற்றி எழுதவேண்டுமானால் ஒரு கட்டுரைத் தொகுப்பில் நினைவுகளை பதிவு செய்ய முடியாது. சரி, எப்படி இயேசு நம்மீது இந்த அளவு அன்பு கூர்ந்தார் என்று இயற்கையாகவே நமக்குள் ஒரு கேள்வி எழும்பும். இயேசுவின்

அன்பின் பல்வேறு நிலைகளை நாம் அன்பில் தேறுவதற்காக, முதிர்ச்சி அடைவதற்காக நாம் பார்ப்போம்.

## II கிறிஸ்து அன்பு செலுத்தகூடாதவர்கள் மீது அன்பு செலுத்தினார்

ரோமர் 5:8ல் நாம் வாசிக்கும்போது "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் என்று வாசிக்கிறோம். அதாவது பாவமுள்ள மனிதன் இயேசுவின் அன்புக்கு பாத்திரன் அல்ல. ஆனாலும், இயேசு நம்மீது அன்பு வைத்து நம்முடைய பாவங்களுக்காக தமது ஜீவனையே கொடுத்தார். எனவே கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுவதற்கு நாம் சத்துருக்களையும் சிநேகிக்க கற்றுக்கொள்ளவேண்டும். இது கடினமான காரியம் தான், பொதுவாக நம்மிடத்தில் அன்பாயிருப்பவர்களிடத்தில் நாமும் அன்பாயிருப்பது என்பது எளிதான காரியம், இந்த உலகத்தின் மக்களும் அதைச் செய்கிறார்களே! ஆனால், நாம் சற்று வித்தியாசமாக நம்முடைய சத்துருக்களையும் சிநேகிக்க வேண்டும் இதைதான் இயேசு நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார், மலைப்பிரசங்கத்திலே இதைத்தான் சொன்னார் (மத்தேயு 5:44). சிலர் இப்படியாகச் சொல்லுவார்கள் "சகோதரா, அவர் எனக்கு செய்த காரியங்கள் உங்களுக்குத் தெரியாது, என்னுடைய நிலைமையில் நீங்கள் இருந்தால்தான் உங்களுக்குத் தெரியும்" என்று சொல்வார்கள். ஆனால், இயேசுவை நினைத்துப்பாருங்கள் இயேசுவை வாரினால் அடித்தார்கள், பரியாசம் செய்தார்கள், முகத்தில் துப்பினார்கள், ஈட்டியினாலே அவரைக் குத்தினார்கள் ஆனால், இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போது கூட அவர்களுக்காக ஜெபம் பண்ணினார். (லூக்கா. 23:34). இதை நாம் சிந்தித்துப் பார்த்தால் நாம் நம்முடைய சத்துருக்களை சிநேகிப்பது சாத்தியமாகும். நாம் கிறிஸ்துவுக்காய் அப்படி செய்யவேண்டும்.

அப்படியென்றால் நம் மனதில் ஒரு கேள்வி எழும்பும் "எனக்கு இத்தனை தீமைகள் செய்த என் சத்துருவுக்கு தண்டனையே கிடையாதா? ரோமர்களுக்குப் பவுல் எழுதும் போது, அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்கு பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய்" என்று கூறுகிறார் (ரோமர் 12:20). எனவே, நாம் சத்துருக்களை சிநேகித்து அவர்களுக்கு நன்மை செய்வோம் அவர்களுக் குண்டான தண்டனையைப் பற்றி தேவன் பார்த்துக்கொள்வார். ஏனென்றால், பழிவாங்குதல் எனக்குரியது நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்கிறார் (உபாகமம் 32:35). சிலர் நான் தேவனிடம் அன்பாயிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு சொந்த சகோதர, சகோதரிகளிடம் அன்பாயிருக்க மாட்டார்கள் இவர்களைப் பற்றி அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லும் போது "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில்

அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாததேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்? என்று ஒரு கேள்வியைக் கேட்கிறார். சாதாரணமாக, அருகிலிருக்கிற, காண்கின்ற ஒரு பொருளின் மீது அன்பு கூருவது எளிதான காரியமாகும். ஆனால், ஒருவர் அப்படிச் செய்ய தவறும்போது காணாத தேவனிடத்தில் அன்பு கூறுவது ஒரு கேள்விக்குறிதான். எனவே, வாலிப நெஞ்சங்களே நமக்கு மற்றவர்கள் செய்த தீமைகளை மறந்து, அவர்களை மன்னித்து அவர்களிடத்தில் அன்பு கூறுவோம். நம்முடைய பாவங்கள் தேவனால் மன்னிக்கப்பட வேண்டுமானால், நாம் மற்றவர்கள் நமக்கு செய்த தீமைகளை மறந்து, அவர்களை மன்னித்து விடவேண்டும். ஏனென்றால் அன்பு திரளான பாவங்களை மூடும் (1பேதுரு 4:8).

பொதுவாகவே, ஒருவரிடம் நாம் அன்பு கூறும்போது அவருடைய தவறுகள் எல்லாம் நமக்கு பெரிதாக தெரியாது. இது உலகத்தின் மக்களுக்குத்தான் பொருந்தும், ஏனென்றால், கிறிஸ்தவர்களாகிய நாம் சகோதரன் ஒருவன் தவறு செய்யும் போது நாம் அன்புடன் புத்தி சொல்ல வேண்டும். அன்பினால் அவர்களை நாம் திருத்த வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் அன்பிற்கென்று 1 கொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தை ஒதுக்கியிருக்கிறார். அந்த அதிகாரத்தை நாம் படித்து, தியானித்து அன்பின் குணாதிசயங்களை நடைமுறைப்படுத்துவோம். நாம் அனுதினமும் கிறிஸ்து நம்மீது அன்பு கூர்ந்து நமக்காக பட்டபாடுகளை யெல்லாம் சிந்தித்துப் பார்ப்போமானால் நாம் இந்த உலகத்திலுள்ள யாவரையம் நேசிப்பது எளிதாகும் அதற்கு கிறிஸ்துவினுடைய அன்பு நம்மை நெருக்கி ஏவவேண்டும் (கொரிந்தியர் 5:14). எனவே, பிரியமான வாலிப நெஞ்சங்களே, கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற விரும்பும் நாம் அவர் நம்மில் அன்பாயிருக்கிறது போல நாமும் ஒருவரிலொருவர் அன்பாயிருப்போம், அதினால் நாம் இயேசுவின் சீஷர்கள் என்று எல்லோரும் அறிந்து கொள்வார்கள் அதினால் தேவனுடைய நாமம் மகிமைப்படும், இப்படி தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியான காரியங்களை செய்ய நாம் பாடுபடுவோம்! கர்த்தர் தாமே அதற்கு உதவிச் செய்வாராக ஆமென்!.

**BENNY MARTIN**


## பழைய ஏற்பாட்டு ஆசாரியர்களின் தேவ விரோத செயல்கள்

1. **ஆசாரியர்கள் ஜனங்களின் பாவத்தைத் தின்று பிழைப்பு நடத்தினர் (ஓசி. 4:8).**
2. **அவர்கள் தங்களுக்குப் போதிய அறிவு இல்லாமையினாலே பாவஞ்செய்தார்கள் (ஓசி 4:6).**
3. **பரிசுத்தத்திற்கும், அசுத்தத்திற்கும் உள்ள வித்தியாசத்தை காண்பியாமற் போனார்கள் (எசே. 33:26).**
4. **மேலும், ஆசாரியர்கள் மனப்பூர்வமாக உபதேசிக்காமல், கூலிக்காக உபதேசம் பண்ணினார்கள். (மீகா. 3:11).**

சிறுவர் பகுதி

# பெற்றோருக்கு கீழ்ப்படிதல்

எனதருமை சிறுதம்பி, தங்கைகளே! இம்மாதமும் இக்கட்டுரையின் மூலமாய் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். நாம் இச்சிறுபிராயத்திலிருந்தே தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் கற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிவது மிகச் சிறந்த செயலாகும். எனவே பெற்றோருக்கு எப்படி நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதை நாம் கற்றுக்கொள்வோமா!.



"குப்பையை எடு", "பாடம் படி", "வேதம் வாசி" இவைகள் சிறுபிள்ளைகளாகிய நாம் அனுதினமும் கேட்கும் காரியங்கள். ஆனால், எவ்வளவு முறை நாம் புறக்கணிக்கிறோம். அல்லது அதற்குக் கீழ்ப்படியாமற் போகிறோம்! நாம் ஒருவேளை கீழ்ப்படிதல் அவசியமில்லை. அது ஒன்றும் தவறில்லை என்று நினைக்கக்கூடும். ஆனால், தேவன் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்! அதை தான் செய்ய வேண்டும். சரி தேவன் இதைப்பற்றி கூறுவது என்ன? தொடர்ந்து படியுங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசே நாட்டு சபைக்கு எழுதும் போது, அங்கிருந்த சிறுபிள்ளைகளுக்கு குறிப்பாக "பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது". (கொலோ 3:20) என்று கூறுகிறார். இது முக்கியம் என கருதின பவுல் இதையே எபேசு சபைக்கு எழுதுகிறார்.

"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம், உன் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனை" (எபே. 6:1-3) என்று கூறுகிறார்.

இது பத்து கட்டளைகளில் 5வது கற்பனையாக கொடுக்கப் பட்டதலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது (யாத். 20:12).

ஏன் பவுல் இதை முதலாம் கற்பனை என்று கூறுகிறார் என்றால், விசேஷமான வாக்குத்தத்தத்தோடு கொடுக்கப்பட்ட முதலாம் கற்பனை இது.

சரி, பவுல் என்ன கூறுகிறார் என்றால் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுகிறவர்கள், பண்ணாதவர்களைக் காட்டிலும் நன்மையான வாழ்க்கையும், நீண்ட வாழ்க்கையும் பெறுவார்கள் என கூறுகிறார். சரி, இதன் பொருள் என்ன என்று பார்க்கும் பொழுது, பெற்றோருக்கு கீழ்ப்படியும் பிள்ளைகள் எந்தவிதமான தவறான காரியத்திலேயும் ஈடுபாடு கொண்டவர் களாய் இருக்கமாட்டார்களாதலால், அவர்கள் சந்தோஷமாய் நன்மையான வாழ்வு பெறுவார்கள் என்பதையே இங்கு விளக்குகிறார்.

எளிதான உண்மை எது என்றால் இந்த வாழ்விலும் அதற்கு பின்வரும் வாழ்விலும் நன்மை உண்டாக வேண்டுமானால் பெற்றோரை கனப்படுத்தி கீழ்ப்படிய வேண்டும். இது தேவன் கொடுக்கும் கட்டளை.

பெற்றோர் சொல்லை எப்போது கேட்கக்கூடாது? எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? சரி, சொல்கிறேன்! நம் பெற்றோர்கள் தேவனுடைய வார்த்தைக்கு புறம்பாக காரியங்களைசெய்ய சொல்லும் பொழுது அவர்களுக்கு கீழ்ப்படியக் கூடாது. பொதுவாக கிறிஸ்தவ பெற்றோர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். ஆனால் அப்படி சூழ்நிலை வரும் பொழுது நாம் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார் தெரியுமா? வாசியுங்கள் "மனுஷருக்கு கீழ்ப்படிவதை பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவது அவசியம்" (அப். 5:29).

என்ன பிள்ளைகளே! இது நமக்கு முக்கியமான பாடம்! அப்படித்தானே! சரி, தேவனுக்கு பிரியமானதை எப்போதும் செய்யுங்கள்.

***R. Abel Rodger Nayagam***

## தானியேலின் தீர்மானங்கள்

1. **தேவனுக்கு சித்தமில்லாதவைகளை செய்யக் கூடாது என்று தன் இருதயத்தில் தீர்மானித்தான் [1:8]**
2. **பாவம் [தீமை] செய்யக்கூடாது என்று தீர்மானித்தான் [1:8]**
3. **தேவனுக்கு கீழ்ப்படிய தீர்மானித்தான் [1:8]**
4. **தானும், தன்னோடு இருந்த ஞானிகள் அழியாதபடிக்கு தீர்மானித்தான் [2:17]**
5. **தேவன் தனக்கு தந்த தரிசனத்தை வெளிப்படுத்த தீர்மானித்தான் [2:28]**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த மாதம் நம்முடைய பாடத்தை நாம் முடித்த போது கீழ்காணும் கேள்வியை நாம் கேட்க தொடங்கியிருந்தோம். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவருக்கென்று எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்? தேவன் ஒரு குறிப்பிட்டத் தொகையோ அல்லது சதவீதத்தையோ குறிப்பாக சொல்லவில்லை என்று நாம் புதிய ஏற்பாட்டில் பார்த்தோம். ஆனால், நாம் அவரைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் உதாரத்துவமாக அவருக்கு கொடுக்க வேண்டும் என்று தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார். இந்த உண்மைகளை தேவன் தெளிவுபடுத்துகிற சில வசனங்களை நாம் பார்ப்போம்.

முதலாவது, நாம் ஏற்கனவேப் படித்த 1 கொரிந்தியர் 16:2யை கவனியுங்கள் நம்முடைய வரவுக்குத்தக்கதாக நாம் கொடுக்க வேண்டும் என்று தேவன் சொல்கிறார். அதாவது நம்முடைய சரீரப்பிரகாரமான ஆசீர்வாதத்திற்குத்தக்கதாக நாம் கொடுக்க வேண்டும்.

நாம் நம்முடைய சரீரப்பிரகாரமான செழிப்புக்கேற்ப கொடுக்க வேண்டியிருப்பதால் சரீரப்பிரகாரமான ஆசீர்வாதத்தின் நம்பிக்கைக்காக நாம் என்ன செய்ய வேண்டும். தேவனே, அதற்கான பதிலைத்தருவதால் அவருக்கு நாம் நன்றி செலுத்துவோம்.

III யோவான் 2-7 வசனங்களை நாம் வாசிக்கும்போது பிரியமான அப்போஸ்தலன் அந்த கிறிஸ்தவர்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறார். இந்த உண்மையைக் கூர்மையாக கவனியுங்கள். அவர்களுடைய ஆத்துமா வாழ்வது போல் அவர்களும் வாழ வேண்டும் என்று அப்போஸ்தலன் ஜெபம் செய்கிறார். ஆகவே நீங்களும், நானும் தேவனுடைய சித்தத்தின்படி சரீரப்பிரகாரமான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வதற்கு நம்பிக்கை உடையவர்களாக இருந்தால் நம்முடைய ஆத்துமா ஆவிக்குரிய பிரகாரமாக வாழ்கிறது என்பதை நிச்சயத்துக் கொள்வதற்காக நாம் நம்மால் முடிந்த வரை எல்லாவற்றையும் செய்ய வேண்டும். அவர்களுடைய அதாவது அந்த கிறிஸ்தவர்களுடைய ஆத்துமா ஏற்கனவே சுகமாய் வாழ்த்து கொண்டிருக்கிறதாக யோவான் சொல்கிறார். தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் அவர்களைப் பற்றி எப்படி விவரிக்கிறார் என்று கவனியுங்கள். நீங்களும், நானும் ஆவிக்குரியப் பிரகாரமாக செழிப்பாக வாழ்வதற்கு அவசியமான அநேக காரியங்களை தேவன் இங்கே பட்டியலிடுகிறார். முதலாவது, தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம் அவர்களுக்குள் இருந்தது. அதுமாத்திரமல்ல! இரண்டாவது அவர்கள் சத்தியத்திலே நடந்துகொண்டிருந்தார்கள். அதாவது, தேவன்

தம்முடைய வார்த்தையாகிய சத்தியத்திலே என்ன கட்டளையிட்டிருக்கிறாரோ அதன்படி வாழ தங்கள் முழு இருதயத்தோடும் பாடுபட்டார்கள்.

மூன்றாவது, அவர்கள் சகோதரருக்கும், அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய்ச் செய்தார்கள். அதாவது, அவர்களுடைய விசுவாசமானது அவர்கள் மற்ற கிறிஸ்தவர்களுக்கும், சபையில் இல்லாதவர்களுக்கும் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருந்தாரோ அதைச் செய்ய தூண்டிய்து. அந்த காரியங்களைச் செய்ய அவர்கள் நம்பிக்கைக்குரியவர்களும், உண்மையுள்ளவர்களுமாயிருந்தார்கள். நான்காவது, அந்த கிறிஸ்தவர்களின் அன்பு மற்றவர்களால் அறியப்பட்டிருந்தது. தெளிவாக, இது தேவனுக்கான அன்பையும், சக மனிதர்களுக்கான அன்பையும் உள்ளடக்கியிருக்கிறது. (மத்தேயு 22:37:39).

இவ்விதமான கிறிஸ்தவ ஜீவியம் நம்முடைய ஆத்துமா ஆவிக்குரிய பிரகாரமாக வாழ்கிறது என்பதை நிச்சயித்துக் கொள்வதற்கு அவசியமாகும். இந்த குணாதிசயங்களையும், இன்னும் வேறு சில குணாதிசயங்களையும் நாம் கொண்டிருக்க பாடுபட்டால், யோவான் அந்த கிறிஸ்தவர்களுக்காக ஜெபித்ததுபோல, நாம் சரீரப்பிரகாரமாக செழிப்பாக வாழும்படி தேவன் செய்வார்.

II கொரிந்தியர் 8:1-5 வரை வாசியுங்கள், இந்த வசனங்களில் பவுல் மக்கெதோனியா பகுதியில் உள்ள கிறிஸ்துவின் சபைகளைப் பற்றிப் பேசுகிறார். இந்த பிரியமான கிறிஸ்தவர்களை நாம் கர்த்தருக்குக் கொடுக்கிற காரியத்தில் உங்களுக்கும் எனக்கும் ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள். அவர்களைப் பற்றி அப்போஸ்தலன் எப்படி விவரிக்கிறார் என்று கவனியுங்கள். முதலாவது, அவர்கள் மிகுந்த உபத்திரவத்தில் இருந்தார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்காய் பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

இரண்டாவது, அவர்கள் வெறுமனே தரித்திரராயிருக்கிவில்லை, அவர்கள் கொடிய தரித்திரத்தில் இருந்தார்கள். பிரியமானவர்களே, இந்தியாவில் அநேக கிறிஸ்தவர்கள் சரீரப்பிரகாரமாக தரித்திரத்தில் இருக்கிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆனால், மக்கெதோனியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் கொடிய தரித்திரத்தில் இருந்தார்கள். அந்த கிறிஸ்தவர்கள் செய்த காரியத்தை தயவு செய்து கவனியுங்கள். கடினமான நெருக்கடியான சூழ்நிலைகள் இருந்தபோதிலும், அந்த கிறிஸ்தவர்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே நிறைந்திருந்தார்கள். அந்த பரிபூரண சந்தோஷம் அவர்களை என்ன செய்ய தூண்டியது என்பதை ஜாக்கிரதையாய் கவனியுங்கள். அந்தத் தரித்திரத்தில் இருந்த கிறிஸ்தவர்கள், பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய வேலைக்காக மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். தேவனுடைய தாசனாகிய பவுல் அதற்காக அவர்களை மெச்சுகிறார்! பிரியமானவர்களே

நீங்களும், நானும் தேவனால் புகழப்படவேண்டுமானால், பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுக்க வேண்டும்.

3,4 வசனங்களில் தேவன் இவர்களைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதை கவனியுங்கள். முதலாவது, அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள். இரண்டாவது கர்த்தருக்கென்று கொடுப்பதற்கு அவர்கள் மனதாயிருந்தார்கள் அவர்களை யாரும் வற்புறுத்தவில்லை.

மூன்றாவது, அவர்களுடைய உதாரத்துவமான உபகாரத்தை ஏற்றுக் கொள்ளும்படி பவுலை வேண்டிக் கொண்டார்கள். நான்காவது, அவர்கள் உதாரத்துவமாய் அப்போஸ்தலனுக்கு கொடுத்த உபகாரத்தை அப்போஸ்தலனாகிய பவுல் ஏற்றுக்கொள்ளும்படி **மிகவும்** வேண்டிக்கொண்டார்கள். ஐந்தாவது, தாங்கள் கர்த்தருக்கென்று கொடுத்த காணிக்கையை, பரிசுத்தவான்களுக்கு செய்யப்படும், தர்ம ஊழியத்தின் பங்காகக் கண்டார்கள்.

மிகுந்த உபத்திரவத்திலும், தரித்திரத்திலும் இருந்த இந்த கிறிஸ்தவர்கள் எப்படி பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள் என்று ஆச்சரியப்படுகிறீர்களா! தேவன் இதற்கான பதிலை ஐந்தாம் வசனத்தில் தருகிறார்.

முதலாவது, அவர்கள் தங்களைத்தாமே கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தார்கள் அதாவது, அவர்கள் தங்களைத்தாமே முற்றிலும் கர்த்தருக்கென்று அர்ப்பணித்துவிட்டார்கள். தங்களுக்கு இருந்த எல்லா வளங்களுடன் தங்கள் முழு சரீரத்தோடும், தங்கள் முழு ஆவியோடும் தேவனுக்கு சேவை செய்ய விரும்பினார்கள். நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். மேலும் இந்த கிறிஸ்தவர்கள் தங்களுக்குண்டான யாவும் கர்த்தரிடத்திலிருந்து கடனாகப் பெற்றதாகவும் நியாயத்தீர்ப்பு நாளில் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டதைக் குறித்து கணக்கொப்புவிக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்டார்கள்.

உங்களுக்கும், எனக்கும், தரித்திரத்திலிருந்து கர்த்தருக்குக் கொடுத்த இந்த கிறிஸ்தவர்கள் எவ்வளவு அருமையான மாதிரிகளாயிருக்கிறார்கள். இவர்களைப் போல நாம் கர்த்தருக்கு காணிக்கைக் கொடுக்க கற்றுக் கொண்டால் அவருடைய நேசகுமாரனுக்குள் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் வைத்திருக்கிற அன்புள்ள தேவனை நாம் நிச்சயமாகப் பிரியப்படுத்துவோம்.

II கொரிந்தியர் 8:12யை வாசியுங்கள் இந்த வசனத்தில் பிரியமான தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் கர்த்தருக்கு காணிக்கை கொடுப்பது சம்பந்தமான தலைப்பில் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார். முதலாவது நாம் மனவிருப்பமுடையவர்களாக இருக்க வேண்டும் என்று

தேவன் பவுல் மூலமாகச் சொல்கிறார். அதாவது, யாரும் நம்மை வற்புறுத்தாமலேயே தேவனக்கென்று கொடுப்பதற்கு நம்முடைய மனதில் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். தேவன் நமக்குக் கொடுத்த ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களை நாம் நினைத்துப்பார்த்தால் இது நமக்கு எளிதாக இருக்கும்.

இரண்டாவது, நம்முடைய அன்புள்ள தேவன் நம்மிடம் உள்ளதின்படியே கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நம்முடைய நீதியுள்ள தேவன் நம்முடைய இல்லாததின்படி கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. வேறொரு வார்த்தையில் சொன்னால் பொருளாதாரம் நம்மிடம் அதிகம் இல்லாதிருந்தால், நம்மிடம் இருப்பதைக்காட்டிலும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்க தேவன் நியாயமற்றவர் அல்ல. இது நமக்கு ஆறுதலைக் கொடுக்க வேண்டும்.

இந்த உண்மையைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். நம்மைப் பற்றி எல்லாவற்றையும் தேவன் நன்றாக அறிவார் நம்மிடம் என்ன இருக்கிறது என்பதும் அவருக்கு தெரியும். அவர் நம்மை ஆசீர்வத்திருக்கிற வளங்களைக் கொண்டு அவருக்கு நாம் உதாரத்துவமாய்க் கொடுக்க வேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். இது ஒரு தெளிவான எண்ணமாகும் இது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாம் கர்த்தருக்கென்று எவ்வளவு கொடுக்க வேண்டும் என விவரமாக பரிசோதிப்பதற்கு நம் ஒவ்வொரு வரையும் தூண்ட வேண்டும்.

II கொரிந்தியர் 9:6யை நாம் வாசிக்கும் போது இந்த வசனத்தில் தேவன் நாம் அவருக்கு செலுத்தும் காணிக்கையைப் பற்றி தான் பேசுகிறார் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது நாம் என்ன விதைக்கிறோம் என்று தேவன் குறிப்பிடும்போது நம்முடைய காணிக்கையைப் பற்றி தான் தேவன் குறிப்பிடுகிறார். எனவே, சிறுக விதைக்கிற மக்களைப் பற்றி தேவன் விவரிக்கும்போது அவருடைய பணி சிறப்பாக நடைபெறுவதற்கு உதாரத்துவமாக காணிக்கை செலுத்தாத சில மக்களைப் பற்றி தான் பேசுகிறார். இப்படி சிக்கனமாக காணிக்கை கொடுப்பதின் விளைவு என்ன? நாம் சிக்கனமாக அறுப்போம் அல்லது சிறுக அறுப்போம் என்று தேவன் சொல்கிறார். இப்படிப்பட்ட நபர் இந்த வாழ்க்கையிலும் சரி, வரவிருக்கின்ற வாழ்க்கையிலும் சரி தேவனிடத்திலிருந்து அபரிதமான பலனைப் பெறமாட்டார்.

ஆனால், பிரியமானவர்களே, இந்த வசனத்தில் காணப்படும் வித்தியாசத்தை கவனியுங்கள். தேவன் இன்னொரு நபரை பற்றியும் பேசுகிறார். இந்த நபர் கர்த்தருக்கென்று அபரிதமாகக் கொடுப்பவராவார். அதாவது மக்கெதோனியாவிலுள்ளவர்களைப் போல் உதாரத்துவமாய்க் கர்த்தருக்கென்று காணிக்கை கொடுக்கும் நபரைப் பற்றி தேவன் இங்கே பேசுகிறார். அப்படிப்பட்ட நபர் பெருக அல்லது அபரிதமாக அறுப்பதாக

தேவன் சொல்கிறார். அதாவது, அபரிதமாக கொடுப்பவருக்கு தேவன் இந்த வாழ்க்கையிலும் வரவிருக்கின்ற வாழ்க்கையிலும் அபரிதமாக பலனைக் கொடுத்திடுவார்.

II கொரிந்தியர் 9:8ல் நாம் வாசிக்கும்போது நம்முடைய ஒன்றான ஜீவனுள்ள தேவன் உங்களிடத்திலும், என்னிடத்திலும் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார். இந்த வசனப் பகுதியில் தேவன் எதைப் பற்றி பேசுகிறார் என்பதை மனதில் கொள்ள வேண்டும். நீங்கள் அறிந்தபடி நாம் அவருக்கு கொடுக்கும் காணிக்கையைப் பற்றிதான் பேசிக்கொண்டிருக்கிறார். தேவன் நமக்கு அபரிதமாக பலனளிக்கும்படியாக நாம் அவருக்கு அபரிதமாகக் கொடுக்க வேண்டும் என்று பவுல் மூலமாக புத்திமதி சொன்னார். இப்போது இந்த வசனத்திலே தேவன் நாம் எல்லாவற்றிலும், எப்பொழுதும் சம்பூரணமுடையவர் களாவோம் என்று தேவன் நிச்சயப்படுத்துகிறார். வேறொரு வார்த்தையில் சொன்னால் நம்முடைய வாழ்க்கையின் தேவைகள் தேவனால் சந்திக்கப்படும்.

அதுமாத்திரமல்ல! சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும் நமக்கு அபரிதமாகத் தருவதாகவும் தேவனால் நிச்சயப்படுத்த முடியும். ஆனால், தேவன் எதற்காக சிலருக்கு சரீரப்பிரகாரமான ஆசீர்வாதத்தைக் கொடுக்க வல்லவராயிருக்கிறார் என்பதை கவனியுங்கள் நீங்கள் சகலவித நற்கிரியை களிலும், பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, நற்கிரியைகளை செய்பவர் களைத் தாங்கும்படியாகத்தான் எனவே, சகலவித நற்கிரியைகளை நீங்கள் தாங்குபவர்களாக இருந்தால் தேவன் சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களை உங்களிடத்தில் நிச்சயப்படுத்த விருப்பமுள்ளவராயிருக்கிறார்.

யாரை தேவன் இவ்விதமாக ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராயிருக் கிறார்? 1 கொரிந்தியர் 16 ஆம் அதிகாரத்திலும், II கொரிந்தியர் 8 மற்றும் 9 அதிகாரங்களிலும் நாம் என்ன பார்த்தோம்? கீழ்க்கண்டபடி செய்தால் நானும், நீங்களும் அவர்களைப் போன்றவர்களாயிருப்போம். நம்முடைய வரவுக்குத் தக்கதாக, அபரிதமாக, உதாரத்துவமாய், நம் கொடிய தரித்திரத்திலிருந்தும், நாம் இவ்வளவு தான் கொடுப்போம் என்று மற்றவர்கள் நினைப்பதைக் காட்டிலும் நாம் அதிகமாகக் கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். முதலாவது நம்மையே கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்; கர்த்தருக்கென்று சிறுக அல்லது பெருகக் கொடுக்கவேண்டும். எல்லாவித நற்கிரியைகளை செய்யவும், தாங்கவும் மனதாயிருக்க வேண்டும்.

அடுத்த மாதம் கர்த்தருக்கு எப்போதெல்லாம் கொடுக்கவேண்டும் எவ்விதமாக கொடுக்கவேண்டும் என்கின்ற கேள்விகளுக்கு பதில் அளிப்போம். அதுவரை கர்த்தருக்கு காணிக்கை எப்படி கொடுக்கிறோம் என்பதை சோதித்தறிந்து அவரைப் பரியப்படுத்துவதில் முன்னேறுவோம்.

**CHARLIE DIPALMA** **BENNY MARTIN**

# பரிணாமக்கொள்கை

வாசகர் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் வாழும் இவ்வுலகம் எப்படி உண்டாயிற்று? மனிதன் எங்கிருந்து வந்தான்? மனிதனின் வாழ்க்கையின் தொடக்கம் என்ன? இப்படிப்பட்ட கேள்விகள் மீண்டும், மீண்டும் இந்த இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கேட்கப்பட்டு வருகின்றனர். சிலர் இக்கேள்விக்குப் பதில் தங்களுக்குத் தெரியும் என்றும் அதுதான் பரிணாமக் கொள்ளை என்றும் குறிப்பிடுகின்றனர்.

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்ற இடங்களில் பரிணாமக் கொள்கையை உண்மை எனப் போதிக்கின்றனர். இன விருத்திக்கும் வாழ்வின் விளக்கத்திற்கும் பரிணாமக் கொள்கையை நமது பொருட்காட்சி நிலையங்கள் ஆதாரமாகக் காண்பிக்கின்றன. விஞ்ஞான புத்தகங்கள் முழுவதும் இவற்றையே கற்பிக்கின்றன.

பரிணாமக் கொள்கை என்பது உண்மையா? மனிதன் தன்னை விட கீழான வாழ்க்கை வாழும் குரங்கிலிருந்து வந்திருக்க முடியுமா? அப்படி உண்மையானால் இந்த குரங்கு படிப்படியாக வளர்ச்சி அடைந்து இன்று வாழ்வின் மேலான நிலையை ஏன் அடையவில்லை? பல நூற்றாண்டு களாகவே நாம் குரங்கை குரங்காகத்தானே பார்த்துக் கொண்டு வருகிறோம்! ஏன் படிப்படியாக எந்த ஒரு மாற்றமாகவில்லை? எனவே பரிணாமக் கொள்கை என்பது மனிதனின் அபிப்பிராயம் மட்டுமே அது உண்மையாகாது ஏட்டு கொள்கையை, அல்லது தத்துவத்தை உண்மை என போதிப்பது ஏமாற்றுவதாகும். பரிணாமக் கொள்கை உண்மையைப் போல் கற்றுக் கொடுக்கப்படுகிறது ஆனால் அக்கொள்கை நிரூபிக்கப்படவில்லை என்பது உண்மை.

இந்தக் கொள்கை நிரூபிக்கப்பட்ட ஒரு காரியம் என்றால் அது வெறும் கொள்கையாக இருக்க முடியாது. அது உண்மையாக இருக்க வேண்டும். ஆனால் இன்று வரை அது கொள்கையாக மட்டுமே உள்ளது. இப்படிப்பட்ட கொள்கைகள் நமது பிள்ளைகளுக்குப் போதிக்கப்படுகிறது. இதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உண்மையில்லாதவற்றை உண்மை என்று போதிக்கின்றனர் நமது பிள்ளைகளும் கற்றுக்கொள்கிறார்கள். நாம் இந்த பரிணாமக் கொள்கை என்பது நிரூபிக்கப்படாத கொள்கை என்று பிள்ளைகளிடம் தெளிவுபடுத்தி இப்படிப்பட்ட கொள்கை தேவனுக்கு விரோதமானது இது மூடத்தனமானது என்றும் கூறி நமது பிள்ளைகளை தேவ பக்தியிலே வளர்க்க வேண்டும்.

தேவனையும் அவருடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியினால் படைக்கப்பட்ட சகல காரியங்களைப் பற்றிய உண்மைகளை அழிக்க உருவாக்கப்பட்டதே பரிணாமக் கொள்கை. ஆனால் உலகத்தைப்பற்றி நாம் ஆராயும்போது அது ஒரு தெய்வீகமாகவும், அற்புதமாகவும் அது ஒரு

பெரிய வல்லமையுள்ள சக்தியான தேவனால் படைக்கப்பட்டது என்ற ஒரே சரியான முடிவுக்கே நாம் உண்மையில் வரமுடியும். ஏனென்றால் இந்த உலகம் ஒரு ஒழுங்கான அமைப்பைக் கொண்டு படைக்கப்பட்டது. "Kosmos" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து "Cosmos" என்ற ஆங்கில வார்த்தை வந்துள்ளது. இதன் பொருள் ஒழுங்கான அமைப்பு என்பதாகும். இன்றும் இந்த வார்த்தை பல இடங்களில் பயன்பட்டுவருகின்றன. உதாரணமாக அழகுசாதனப் பொருட்கள் ஒரு ஒழுங்கான அமைப்பைக் கொடுக்கின்றன. இந்த அழகு சாதனப் பொருட்களை "Cosmotics" என்கிறோம்.

இந்த ஒழுங்கான உலகத்தைப் படைத்தது தேவனே, ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி. 1:1) என்ற வசனத்துடன் பரிசுத்த வேதாகமம் துவங்குகிறது. தேவனுக்கும் இந்த உலகத்திற்கும் சம்பந்தமில்லை என்று பரிணாமக் கொள்கைக்காரர்கள் கூறுகிறார்கள். கடிகாரத்தை உபயோகிக்கும் நபர்கள் கடிகாரத்திற்கும் அதை உண்டாக்கினவருக்கும் சம்பந்தமில்லை கடிகாரம் தானாக வந்தது என்று கூறுவது எப்படி மூடத்தனமோ அதுபோல் தான், தேவனுக்கும் இந்த உலகத்திற்கும் சம்பந்தமில்லை என்பதும். ஏனென்றால், தேவன் இந்த உலகத்தைப் படைத்து சாவி கொடுப்பது போன்று'இயற்கையை தானாக இயங்க வைத்தார் அது தானாக இயங்குகிறது, அவர் தலையிடுவதில்லை.

தேவன் தான் இருப்பதாக நிருபிக்க முயற்சிக்கவில்லை, ஏனென்றால் இருக்கும் ஒருவரை இருக்கிறார் என்று நிருபிக்க முயற்சிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் பரிணாமக் கொள்கைக்காரர்கள் இல்லாததை இருப்பதாக முயற்சிக்கின்றனர். பொய்களுக்குத்தான் நிறைய விளக்கங்கள் தேவை! உண்மைக்கு விளக்கங்கள் தேவை இல்லை. எனவே, தேவன் தான் இருப்பதாக முயற்சிக்காமல் இந்த உலகத்தை படைத்தது தேவன் தான் என்று வேதாகமம் துவங்குகிறது.

மேலும், தாவீது என்ற மனிதன் உலகம் படைக்கப்பட்டு பல நூற்றாண்டுகள் கழித்து வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது என்றார். (சங். 19:1). இந்த அறிவிப்புகள் தேவனையும் அவருடைய படைப்புகள் பற்றியும் நமக்கு கூறுகின்றன. நமது வாழ்க்கை பற்றியும் உலக தோற்றத்தைப்பற்றியும் உலகத்திலுள்ள சகல பொருட்களைப் பற்றியும் எழும் கேள்விகளுக்கு அவைகள் பதில் தருகின்றன. இந்த உலகத்தின் ஆரம்பத்தைக் குறித்தும் மனித வாழ்க்கையின் ஆரம்பத்தைக் குறித்தும் பரிசுத்த வேதாகமம் மட்டுமே தெளிவாக கூறுகின்றன.

பரிணாமக் கொள்கை வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னே தேவன் ஒருவர் இருக்கின்றார் என்ற எண்ணம் மனிதர்களிடம் இருந்தது. எனவேதான் தேவன் இல்லை என்ற கொள்கையை பரப்பியுள்ளனர். தேவன் இல்லை என்று சொல்லும்போது தேவன் என்ற எண்ணம் மனிதர்களிடம் எப்படி வந்தது? என்று இப்படிப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும். தேவனே தம்மை வெளிப்படுத்தியிருந்தபடியால் தேவன் இருக்கின்றார் என்ற

எண்ணம் உண்டாயிருக்கிறது. பவுல் என்பவர் எழுதும்போது தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தினார் எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும் ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை என்றார் (ரோமர் 1:19,20).

விசுவாசத்தினால் வருகின்ற இந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள மிகக் குறைந்த நம்பிக்கையே போதும். தேவன் விசுவாசிப்பதை ஏற்றுக்கொள்வதால் ஒருவன் தனது அறியாமையை வெளிப்படுத்தவில்லை மாறாக தனது ஞானத்தைக் காட்டுகிறான். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள் (நீதி 1:7) ஒரு படைப்பாளிக்கு ஒரு படைப்பு உண்டு என்பது நியாயமானதே என்பதைக் காட்டுகிறது.

தேவன் தன்னுடைய தன்மையைப் பற்றி பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனை நம்பாத பரிணாமக் கொள்கை யாளர்களிடம் கூட தேவனுடைய தன்மையை மறுப்பதில்லை இதில் வேடிக்கை என்னவென்றால் பரிணாமக் கொள்கையாளர் டார்வின் என்பவர் தேவனுடைய தன்மையை ஏற்றுக் கொண்டுள்ளார். டார்வினுடைய பெற்றோர்களோ, டார்வினுடைய பிள்ளைகளோ பரிணாமக் கொள்கையை ஏற்கவில்லையாம்! தேவனைப் பற்றி வேதாகமத்தில் எழுதப்பட்டவைகள் தவறு என்று இதுவரை யாரும் சொன்னதில்லை. தேவனைப் பற்றி சொல்லப்பட்டவைகளை சிலவற்றைக் காண்போம்.

**1. தேவனுடைய நித்திய தன்மை**

ஆதி. 21:33 சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தர்.

உபா 32:40 என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறார்.
உபா 33 : 27 அநாதி தேவன்.
யோபு 36:26 மகத்துவமுள்ளவர்.
சங் 41:13 அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளவர்.
சங் 90:1 தலைமுறை தலைமுறைக்கு அடைக்கலமானவர்.
சங் 93:2 அநாதியாய் இருக்கிறவர்.

**2. தேவனுடைய நித்திய தன்மை**

1 ராஜாக்கள் 8:27 வானாதி வானங்களும் கொள்ளாது.
2 நாளாகமம் 2:6 வானாதி வானங்களும் கொள்ளாது.
சங் 147:5 மகாபெரியவர் அவருடைய அறிவு அளவில்லாதது.
எரே 23:24 வானத்தையும், பூமியையும் நிரப்புகிறவர்.
ஏசா 55:8,9 உயர்ந்தவர்.
1 கொரி 2:16 ஒப்பிட முடியாதவர், ஆராய்ந்து அறிய முடியாதவர், அளவிட முடியாதவர், புத்திக்கெட்டாதவர்.

**3. பரிசுத்தமானவர்**

யாத் 3:5; லேவி 19:2 உங்கள் தேவனும் கர்த்தருமானவர் பரிசுத்தர்.

யோசு 24:19 அவர் பரிசுத்தமுள்ள தேவன் .

1 சாமு 2:2 கர்த்தரைப் போல் பரிசுத்தமுள்ளவர் ஒருவரும் இல்லை.

சங் 22:3 இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.

1 பேதுரு 1:15,16 அவர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்.

**4. தேவன் மாறாதவர்**

மல் 3:6; எபி. 6:17; யாக் 1:17

**5. நீதிபரர்**

சங் 97:2; சங் 103:6; நீதி. 11:31

**6. நீடிய பொறுமையுள்ளவர்** : எபே 4 : 2,3; யாத் 34:6; சங் 86:15

**7. உண்மையுள்ளவர் :** சங் 36:5; எபி 13:5,6; 1 யோ 1:7-10


**8. அன்புள்ளவர் :** எரே 31:3; ஓசி 11:1; யோவா 3:16; 1யோ 4:8,9

அன்பானவர்களே பரிணாமக் கொள்கை என்பது மூடத்தனமானது. தேவனை விசுவாசிப்பதே ஞானமானது. மாறிவரும் இவ்வுலகில் மாறாத தேவனிடத்தில் நம்பிக்கை வைப்போம். பரிணாமக் கொள்கைக்கு நம்மை விலக்கிக் காத்துக் கொள்வோமாக, ஆமென்!.

K. ***பாஸ்கர்,*** சிறுமுகை

**சுவிசேஷம் என்பதற்கு வேதாகமம் கொடுக்கும் பல பெயர்கள்**

1. ஜீவ வார்த்தை (1யோவான் 1:1)
2. தேவ வார்த்தை (அப் 4:31), (பிலி 1:14) (1தெச 2:13) (எபி 13:7)
3. கர்த்தருடைய வார்த்தை (அப் 8:25) (1தெச 1:8) (IIதெச 3:1)
4. ராஜ்யத்தின் வசனம் (மத் 13:19)
5. சுவிசேஷத்தின் வசனம் (அப் 15:7) (கொலோ 1:5)
6. கிருபையின் வார்த்தை (அப் 14:3) (அப். 20:32)
7. இரட்சிப்பின் வசனம் (அப் 13:26)
8. ஒப்புரவாக்குதலின் வசனம் (II கொரி 5:19)
9. சத்திய வார்த்தை (II கொரி 6:7) (கொலோ 1:15) (II தீமோ 2:15)
10. நீதியின் வசனம் (எபி 5:13)
11. ஆரோக்கியமான உபதேசம் (II தீமோ 1:13)
12. சிலுவையின் உபதேசம் (1கொரி 1:18)




# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008



ஒன்பதாவது வேதாகம கருத்தரங்கில் பங்கு பெற்றோரில் மற்றொரு பகுதி



சகோ. பிக்கின்ஸ் | சகோ. பிச்சைமுத்து | சகோ. ஏசையன் | சகோ. தானியேல் துரைராஜ்

சகோ. ஆபிரகாம் லிங்கன் | கருத்தரங்கில் பாடலில் வழி நடத்துவோர் | சகோ. பிலிப் பாஸ்கர்

சகோ. கே.எம். பிலிப் | சகோ. பாஸ்கர் | சகோ. நத்தானியேல் | சகோ. சாமிநாதன்

கருத்தரங்கில் கருத்துரையாற்றிய கருத்தாளர்கள்

இறுதியில் சபையின் பொருளாளர் நன்றி கூறுகிறார்.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam. Ph : 04257 - 222555, 224555